# 2015

# வருடாந்த அறிக்கை

# இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

10-07-2017

மாண்புமிகு மலீக் சமரவிக்கிரம
அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,
30 ஆம், மேற்கு கட்டடம்,
உலக வர்த்தக மையம்,
கொழும்பு 01.

மாண்புமிகு ஐயா,

**ஆண்டறிக்கையும் கணக்குகளின் கூற்றுக்களும் - 2015**

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 13 (2) இன் பிரகாரம் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் 2015 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையினை பின்வரும் ஆவணங்களுடன் இணைத்து, பணிப்பாளர் சபையின் சார்பில் சமர்ப்பிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

- தலைவரின் அறிக்கை
- கணக்குகளின் கூற்று
- கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

உண்மையுள்ள,

இந்திரா மல்வத்த
தலைவரும் பிரதான நிறைவேற்று அதிகாரியும்
**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை**

# சிரேஷ்ட முகாமைத்துவப் பணிப்பாளர்கள் - 2015

| | | |
|---|---|---|
| தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்றுனர் | - | திரு. பந்துல எகொடகே (செப்டம்பர் 2015 வரை) |
| தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்றுனர் | - | திருமதி. இந்திரா மல்வத்த (ஒக்டோபர் 2015ல் இருந்து) |
| பணிப்பாளர் நாயகம் | - | திருமதி. டப்ளியு.எம்.டீ.எஸ். வீரகோன் (08.05.2015 வரை) |
| பதில் பணிப்பாளர் நாயகம் | - | செல்வி. ஹிமாலி ஜினதாச (25.06.2015 ல் இருந்து) |
| நிறைவேற்றுப் பணிப்பாளர் | - | கலாநிதி யூசுப் கே மரிக்கார் |
| மேலதிக பணிப்பாளர் நாயகம் (அபிவிருத்தி) | - | திருமதி. ஜே. ஸ்ரீநிவர்தன |
| மேலதிக பணிப்பாளர் நாயகம் (நிதி மற்றும் நிர்வாகம்) | - | செல்வி. ஆர்.எம்.பீ. ஹேவாலியனகே |
| நிதிப் பிரிவு | - | திருமதி. பீ.கே. சுமித்ராரச்சி (பணிப்பாளர்) |
| மனித வளங்களின் அபிவிருத்திப் பிரிவு | - | திருமதி. ஏ.ஜி.சி. கிரியல்ல (பணிப்பாளர்) |
| வர்த்தக வசதியளிபும் வர்த்தக தகவல் பிரிவும் | - | திரு. எஸ்.ஆர்.பீ. இந்திரகீர்த்தி (பணிப்பாளர்) |
| தகவல் தொழில்நுட்பப் பிரிவு | - | திருமதி. பீ.வீ.ஏ.எம். பத்தேகமகே (பணிப்பாளர்) |
| ஏற்றுமதி விவசாயப் பிரிவு | - | திருமதி. என். எஸ். நரன்தெனிய (பதில் பணிப்பாளர்) |
| பிராந்திய அபிவிருத்திப் பிரிவு | - | திரு. கே.எச்.ஆர்.பீ. பெர்நாந்து (பதில் பணிப்பாளர்) |
| கொள்கை மற்றும் உபாயத் திட்டமிடல் பிரிவு | - | திருமதி. யு.கே.டி. வகாபிட்டிய (பணிப்பாளர்) |
| கைத்தொழில் உற்பத்திப் பொருட்களின் பிரிவு | - | செல்வி சீ. திஸாநாயக (பணிப்பாளர்) |
| ஏற்றுமதிச் சேவைகளின் பிரிவு | - | திரு. எம்.கே.எஸ்.கே. மல்தெனி (பணிப்பாளர்) |
| விசேட கருத்திட்டங்கள் பிரிவு | - | திரு. டி. ஜயவர்த்தன (பணிப்பாளர்) |
| சந்தைப்படுத்தல் அபிவிருத்திப் பிரிவு | - | திருமதி. ஐ.சீ. அழகப்பெரும (பதில் பணிப்பாளர்) |
| உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | - | திருமதி. என்.பீ. என்டகம<br>(பதில் உள்ளகக் கணக்காய்வாளர்) |
| சட்டப் பிரிவு | - | திருமதி. டி.ரி. விஜேயரத்ன (சட்ட அலுவலர்) |
| கணக்காய்வாளர் | - | கணக்காய்வாளர் நாயகம் |
| வங்கியாளர்கள் | - | இலங்கை வங்கி<br>சம்பத் வங்கி<br>தேசிய அபிவிருத்தி வங்கி |

**<u>பதியப்பட்ட அலுவலகம்</u>**
இலக்கம் 42, நவம் மாவத்தை,
கொழும்பு 02.

## இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை
## பணிப்பாளர்களின் சபை - 2015

| | | | |
|---|---|---|---|
| 01. | திரு. பந்துல எகொடகே | - | தலைவர் (செப்டம்பர் 2015 வரை)<br>- பணிப்பாளர் (ஒக்டோபர் 2015 ல் இருந்து) |
| 02. | திருமதி. இந்திரா மல்வத்த | - | தலைவர் (ஒக்டோபர் 2015ல் இருந்து) |
| 03. | கலாநிதி. யூசுப் கே மரிக்கார் | - | பணிப்பாளர் |
| 04. | திரு. வீ. சஞ்ஜீவ திக்வல்ல | - | பணிப்பாளர் (செப்டம்பர் 2015 வரை) |
| 05. | திரு. சாந்த டி சில்வா | - | பணிப்பாளர் |
| 06. | திரு. அஹ்சன் றிபாய் | - | பணிப்பாளர் (செப்டம்பர் 2015 வரை) |
| 07. | திரு. ரோஹான் அபயகோன் | - | பணிப்பாளர் |
| 08. | திரு. சினான் சலாஹுடீன் | - | பணிப்பாளர் |
| 09. | திரு. எம்.ஜே.எப். ஹாசிம் | - | பணிப்பாளர் (ஒக்டோபர் 2015 ல் இருந்து) |
| 10. | திரு. ஏ.கே. செனிவிரத்ன | - | மேலதிகச் செயலாளர்<br>கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு |
| 11. | கலாநிதி. டி.பி.ரி. விஜீரத்ன | - | மேலதிகச் செயலாளா<br>விவசாய அமைச்சு (ஏப்ரல் 2015 வரை) |
| 12. | திரு. யு.கே.எஸ். மிகிந்துகுலசூரிய | - | மேலதிகச் செயலாளர் (அபிவிருத்தி)<br>பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு |
| 13. | திரு. பீ.எச்.ஏ.எஸ். விஜீரத்ன | - | மேலதிக பணிப்பாளர் நாயகம்<br>பொது நிறுவனங்கள் திணைக்களம்<br>நிதி அமைச்சு |
| 14. | திரு. எல்.பீ. ஜயம்பதி | - | செயலாளர் துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு (ஒக்டோபர் 2015 ல் இருந்து) |
| 15. | திரு. டீ.வி. பந்துலசேன | - | செயலாளர்<br>விவசாய இராஜாங்க அமைச்சு<br>(ஒக்டோபர் 2015 ல் இருந்து) |
| 16. | திரு. டப்லியூ.எம்.எம்.ஆர். அதிகாரி | - | செயலாளர்<br>மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு (ஒக்டோபர் 2015 ல் இருந்து) |
| 17. | திருமதி. கிரோஸ் ஆசீர்வாதம் | - | சிரோஷ்ட பணிப்பாளர் நாயகம் (பொருளாதார விவகாரங்கள்) வெளிநாட்டு அமைச்சு<br>(ஒக்டோபர் 2015 ல் இருந்து) |
| 18. | திரு. பி.எம். அனுர டீ சில்வா | - | திட்ட செயலாளர் சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சு<br>(ஒக்டோபர் 2015 ல் இருந்து) |
| 19. | திரு. எம்.ஜ.எம். றபீக் | - | செயலாளர்<br>தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு<br>(ஒக்டோபர் 2015 ல் இருந்து) |

| | | | |
|---|---|---|---|
| 20. | திரு. பந்துல விக்ரமராச்சி | - | மேலதிக செயலாளர்<br>முதன்மை கைத்தொழில்கள் அமைச்சு (ஒக்டோபர் 2015 ல் இருந்து) |
| 21. | திரு. பிரியந்த மாயாதுன்ன | - | மேலதிக செயலாளர்<br>கிராமிய பொருளாதார விவகாரங்கள் அமைச்சு (ஒக்டோபர் 2015 ல் இருந்து) |

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 62 |
| 2. | 2015 ஆம் ஆண்டில் ஏற்றுமதிச் செயலாற்றுகை | 63-78 |
| 3. | நிதி நிலை அறிக்கை | 79 |
| 4. | விரிவாக வருமான அறிக்கை | 80 |
| 5. | காசுப் பாய்ச்சல் அறிக்கை | 81 |
| 6. | உரிமையாண்மை மாற்றங்களின் அறிக்கை | 82 |
| 7. | நிதி அறிக்கைக் குறிப்புக்கள் | 83-90 |
| 8. | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | 91-118 |

## இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

## தொலை நோக்கு

இலங்கை ஏற்றுமதிகளின் பயனுறுதிமிக்க அனுசரணைக்காக உலகில் மிகவும் போற்றத்தக்க வர்த்தக ஊக்குவிப்பு தாபன-அங்கீகாரத்துடன் திகழ்வது-

## பணிக்கூற்று

நாம், கொள்கை உருவாக்கம், மூலோபாயம், சந்தை மற்றும் உற்பத்தி அபிவிருத்தி ஆகியவற்றை உள்ளடக்கிய செயற்பாடொன்றின் ஊடாக இலங்கை ஏற்றுமதிகள் மற்றும் ஏற்றுமதியாளர்களை உலகளவில் போட்டித்தன்மையுடன் திகழ்ந்து உச்ச ஏற்றுமதி வருவாயை ஈட்டுவதற்கும் தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்வதற்கும் வழிசமைக்கும் வகையில் ஊக்குவிக்கின்றோம்.

## இலக்குகள் 2020

- 2020 ஆண்டளவில் US$ 20 பில்லியன் ஏற்றுமதி
- தெரிவு செய்யப்பட்ட துறைகளுக்கு உலகளவில் போட்டித்தன்மைமிக்க மூல நாடாக இலங்கையின் நற்சான்றையும் புகழுலையும் கட்டியெழுப்பல்
- உலகளவில் தேவையான பொருளாதார அளவை செயற்படுத்தும் அதேவேவைகையில் ஏற்றுமதிகளின் பயனாளிகளை, குறிப்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்ச்சியாளர்கள் மற்றும் நாடலாவிய விநியோக சங்கிலி வலையமைப்பு ஆகியவற்றை பரந்த அடிப்படையில் தாபித்தல்.

# 2015ஆம் ஆண்டின் போதான செயலாற்றுகை

## 2015ஆம் ஆண்டில் ஏற்றுமதி அபிவிருத்தி சபையால்(ஏ.அ.ச) நிறைவேற்றப்பட்ட முக்கிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்

### அறிமுகம்

1979ஆம் ஆண்டில் 40ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது [ஏ.அ.ச] ஏற்றுமதிகளின் அபிவிருத்தி மற்றும் ஊக்குவிப்பு ஆகிய செயற்பாடுகளுக்கு பொறுப்பாகவுள்ள இலங்கையின் முதன்மை தாபனமாகும். ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது 2020ஆம் ஆண்டில் ஏற்றுமதி வருமானத்ததை US$ 20 பில்லியன் அளவுக்கு அதிகரிக்கும் நோக்கத்தை இலக்காகக் கொண்டு இலங்கை ஏற்றுமதிகளை அபிவிருத்தி செய்து மேம்படுத்தி அதன் ஊடாக அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி நோக்கங்களுக்கு பங்களிப்பு செய்யும் வகையில் புதிய உபாய அணுகுமுறை ஒன்றை பின்பற்றியது. ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது தேசிய ஏற்றுமதி இலக்குகளை அடைவதற்கான புதிய உபாயத்தை நிறைவேற்றுவது தொடர்பில் அதற்குள்ள பொறுப்புகளை நிறைவேற்றும் வகையில் கொள்ளை பற்றிய ஆலோசனை வழங்குதல், கண்காணிப்பு, அனுசரணை வழங்குதல் மற்றும் அறிவை வழங்குதல் ஆகிய அதன் வகிபாகங்களை நிறைவேற்றுகின்றது.

ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது அதன் 2015-2020 மூலோபாயத் திட்டத்திற்கு உகந்த முறையில். சர்வதேச சந்தை தேவைகளை அனுசரிக்கக்கூடிய உகந்த வர்த்தக சுற்றுச்சூழலை ஏற்படுத்தல், உற்பத்தி மற்றும் சேவைகளை அபிவிருத்தி செய்து ஏற்றுக்கொள்ளல், ஏற்றுமதியாளர்களுக்கு அவர்களால் இனங்கண்டு, ஊடுருவி, விருத்தி செய்து சந்தைக்கு பல்வகைப்படுத்தக்கூடிய விசேடமாக வடிவமைக்கப்பட்ட சேவைகளை வழங்குதல், விநியோக சங்கிலித்தொடரின் வினைத்திறனை மேம்படுத்தல் மற்றும் ஏற்றுமதியை இலக்காகக்கொண்ட சிறிய நடுத்தர தொழில் முயற்ச்சியாளர்களை விசேடமாக மாகாணங்களில் ஊக்குவித்தல் போன்ற தொடர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நிறைவேற்றியது.

## 2015-2020 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கான ஏ.அ.ச யின் மூலோபாய திட்டம் /கூட்டிணைத்திட்டம்

ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது 2015-2020 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான அதன் புதிய மூலோபாய திட்டம் தொடர்பில் அரச மற்றும் தனியார் துறை பங்குதாரர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டு அதனை வெற்றிகரமாக அபிவிருத்தி செய்துள்ளது. இந்த செயற்பாட்டின் பிரதான விளைவாக முக்கிய ஏற்றுமதி துறைகளானவை முறையே பிரதான வருவாய் ஈட்டுநர், நிலையான பங்களிப்பாளர்கள், ஆர்வமிக்க போட்டியாளர்கள் மற்றும் சாத்தியமான எதிர்கால நட்சத்திர ஏற்றுமதியானர்கள் போன்ற பல்வேறு குழுக்கலாக கொத்தனியாக்கப்பட்டு உள்ளனர். இந்த ஒவ்வொரு கொத்தனிக்குழுவிற்கும் நாட்டின் வர்த்தக ஏற்றுமதி வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை செலுத்த வேண்டிய பொறுப்புள்ளது. மேலும், இந்த 23 துறைகளின் ஒவ்வொன்றுக்கம் தனித்தனியான மூலோபாயங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. ஏ.அ.ச அதன் 2016ஆம் ஆண்டு செயற் திட்டத்தை மூலோபாய திட்டத்தில் இனங்காணப்பட்ட மூலோபாயங்களின் அடிப்படையில் வகுத்துள்ளது.

**இணையவழி முன்பேற்ற முறைமை**

கொள்கை மற்றும் மூலோபாய திட்டமிடல் பிரிவானது ஏ.அ.ச தகவல் தொழில்நுட்ப பிரிவின் ஆலோசனையுடன் ஏ.அ.ச செயற்திட்டத்தை பதிவேற்றவும் முன்னேற்றத்தை இணையவழியில் அறிக்கையிடவும் இணைய அடிப்படையிலான பயன்பாடொன்றை அபிவிருத்தி செய்துள்ளது. இப்போது ஏ.அ.ச பணியாளர்கள் இந்த வசதியை அணுகி அபிவிருத்தி செயற்பாடுகளின் முன்னேற்றததை பதிவேற்றலாம். ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது அதன் முன்னேற்ற அறிக்கைகளை இந்த ஏற்றுமதி அபிவிருத்தி சபையால் அறிமுகப்படுத்தப்பட்ட இணையவழி வசதியை பயன்படுத்தி தயாரித்துள்ளது.

## சனாதிபதி ஏற்றுதி விருதுகள் 2010 – 2013

ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது “21ஆம் சனாதிபதி ஏற்றுமதி விருது விழாவை” “நெலும் பொகுன” கலையரங்கத்தில் திசம்பர் 16 ஆம் திகதி வைபவரீதியாக ஒழுங்குசெய்தது. இந்த விருதானது 1981ஆம் ஆண்டில் ஏற்றுமதி வருவாயில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கிய ஏற்றுமதியாளர்களுக்கு இலங்கையில் வழங்கும் மிகவும் கௌரவமான விருதாக கருதப்படுகின்றது. நாட்டின் பிரசைகளின் ஏற்றுமதி ஆர்வத்திற்கான ஊக்குவிப்பு மற்றும் அங்கீகாரம் ஆகியவற்றை குறிக்கும் வகையில் இந்த விருதுகள் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிமேதகு சனாதிபதியால் வழங்கப்படுகின்றன. இந்த விருதுகள் ஏ.அ.ச பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட தகவுத்திறன் அடிப்படையில் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்ட அனைத்து உற்பத்தி துறைகளையும் பிரதிநிதித்துவம் செய்யும் மிகவும் சிறந்த ஏற்றுமதி செயலாற்றுகையை கொண்டுள்ள ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்படுகின்றது.





இலங்கையின் அதிமேதகு சனாதிபதி மற்றும் பல அமைச்சரவை அமைச்சர்களால் ஏற்றுமதியாளர்களின் செயலாற்றுகை அங்கீகரிக்கப்பட்டு 130 வெற்றிப்பதக்கங்கள வழங்கப்பட்டன. இந்த வைபவத்திற்கு சமாந்தரமாக வெற்றியாளர்களின் சிறிய கண்காட்சி ஒன்றும் வைபவம் இடம்பெற்ற வளாகத்தில் இடம்பெற்றது.

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையால் நடாத்தப்பட்ட ஆசிய வர்த்தக ஊக்குவிப்பு மன்ற(ATPF) பிரதம நிறைவேற்று அதிகாரிகள் கூட்டம்**

28வது ஆசிய வர்த்தக ஊக்குவிப்பு மன்றத்தின்(ஆ.வ.ஊ.ம) பிரதம நிறைவேற்று அதிகாரிகள் கூட்டம்( ATPF) 2015 ஆகஸ்ட 24 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை இலங்கையில் இடம்பெற்றது. இலங்கையில் முதற் தடவையாக இவ்வாறான நிகழ்வை நடாத்தும் சிறப்புரிமையை ஏற்றுமதி அபிவிருத்தி சபை பெற்றது. இந்த மன்றத்தில் 60ற்கும் மேற்பட்ட ஆசிய வர்த்தக ஊக்குவிப்பு பிரதம நிறைவேற்று அதிகாரிகள், ஆசிய நாடுகளைச் சேர்ந்த 19 உயர் அலுவர்கள் மற்றும் ஜெனிவா சர்வதேச வர்தக நிலைய பிரதிநிதிகள் ஆகியோர் சமுகமளித்திருந்தனர். ஆசிய வர்த்தக ஊக்குவிப்பு மன்றமானது( ATPF) ஆசிய பிராந்தியத்தில்

24 உறுப்பு நாடுகளை உள்ளடக்கிய வர்த்தக ஊக்குவிப்பு தாபனங்களின் கூட்டமைப்பாகும் என்பதுடன் இக்கூட்டமைப்பானது ஜப்பான் வெளிவிவகார வர்த்தக தாபனத்தால் [JETRO] ஒழுங்கமைக்கப்படுகின்றது. பிராந்தியத்தில் வர்த்தகத்தை மேம்படுத்தவதும் உறுப்பினர்களுக்கு இடையில் வலையமைப்பை ஸ்திரப்படுத்தவதும் இந்த ஆசிய வர்த்தக ஊக்குவிப்பு மன்றத்தின்( ATPF) நோக்கமாகும். இலங்கையில் இடம்பெற்ற இந்த ஆண்டின் பிரதம நிறைவேற்று அதிகாரிகளின் கூட்டத்தின் தொனிப்பொருளானது "ஆசியாவை உலகளாவிய பெறுமதி சங்கிலியில் ஒருங்கிணைப்பதாகும்" என்பதுடன் இந்த தொனிப்பொருளானது உலகளாவிய வர்த்தக அரங்கில் முக்கியவொரு நிகழ்கால மற்றும் பிரதான தலைப்பாகவும் உள்ளது. இந்த கூட்டத்தில் பிரபல பேச்சாளர்கள் உரையாற்றியதுடன் உலகளாவிய பெறுமதி சங்கிலியுடன் ஆசியாவை ஒருங்கிணைக்கும் புதியவொரு திட்டத்தை கட்டியெழுப்புவதற்கு வழிசமைக்கும் வகையில் பிரதிநிதிகள் இந்த தொனிப்பொருள் பற்றிய பயனுறுதியான கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர்.








ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது நிறுவன ஒத்துழைப்பை மேம்படுத்தி அதனூடாக ஆசியாவில் அதன் சந்தையை பல்வகைப்படுத்தும் முயற்சிகளை ஊக்குவிக்கும் வகையில் ஹொங்கொங் HKTDC, கொரிய KOTRA மற்றும் தாய்லாந்து DITP ஆகியவற்றுடன் மூன்று புரிந்துணர்வு ஒப்பந்தங்களை செய்துள்ளது. இலங்கை பிரதம நிறைவேற்று அதிகாரிகளுக்கான கூட்டத்திற்காக விவேடமாக வடிவமைக்கப்பட்ட லோகோவொன்று கைத்தொழில் வானிப அமைச்சரால் பாராளுமன்றத்தின் முக்கிய உறுப்பினர்கள் மற்றும் JETRO வின் தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரின் முன்னிலையில் ஆரம்பித்த வைக்கப்பட்டது.

**கமத்தொழில் உற்பத்திகள்,கைத்தொழில் உற்பத்திகள் மற்றும் ஏற்றுமதி சேவைகள் ஆகியவற்றுக்காக நடைமுறைபடுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்**

ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது கமத்தொழில், கடற்றொழில், கைத்தொழில் துறைகள் மற்றும் ஏற்றுமதி சேவைகள் ஆகியவற்றின் முன்னேற்றத்திற்காக 2015ஆம் ஆண்டில் ஒரு தொடர் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைபடுத்தியது. ஏற்றுமதி அபிவிருத்தி சபையால் நிறைவேற்றப்பட்ட முக்கிய செயற்பாடுகளின் முன்னேற்றமானது சுருக்கமாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

**பாதணி மற்றும் பதனிட்ட தோல் உற்பத்தி சந்தை-2015**












ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது கைத்தொழில் வாணிப அமைச்சு மற்றும் இலங்கை பாதணி மற்றும் தோல் உற்பத்திகள் உற்பத்தியாளர் சங்கம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் 7வது பாதணி மற்றும் பதனிடப்பட்ட தோல் உற்பத்தி கண்காட்சியை 2015 பெப்ரவரி 6 முதல் 8 வரை பண்டாரநாக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஒழுங்குசெய்து நடாத்தியது. இந்த நிகழ்ச்சியானது கௌரவ கைத்தொழில் வாணிப அமைச்சரால் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த ஆரம்ப திறப்பு விழாவில் இத்தாலி, பங்கலாதேஸ், கியுபா, பிரேசில், எகிப்து, கொரியா, ஜேர்மனி, மாலைதீவு, இந்தியா, பாகிஸ்தான், பாதஸ்தீனம் மற்றும் தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளை பிரதிநிதிப்படுத்தி பெரும் எண்ணிக்கையிலான இராஜதந்திரிகள் பங்குபற்றினர்.

இந்த கண்காட்சியானது இக்கைத்தொழில் துறையில் படைப்பாற்றல் மற்றும் தேர்ச்சிமிக்க உள்ளூர் திறனாளிகளை இனங்காண்பதற்கு உகந்த மேடையாக அமைந்தது. இலங்கையின் பாதணி மற்றும் தோல் உற்பத்திகளின் புகழை சர்வதேச அளவில் மேம்படுத்தி நிலைநிறுத்துவதே இந்த கண்காட்சியின் பிரதான நோக்கமாகும். இந்த கண்காட்சியானது சிறிய மற்றும் நடுத்தர ஏற்றுமதியாளர்கள் தமது படைப்பாற்றல் மற்றும் திறமைகள் ஆகியவற்றை காட்ச்சிப்படுத்தவும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு சர்வதேச சந்தைக்கு உகந்த சேர் பெறுமதி உற்பத்திகளை உற்பத்தி செய்வதற்கான ஊக்குவிப்பை வழங்குவதற்கும் சிறந்த சந்தர்ப்பமாக அமைந்தது.

இந்த கண்காட்சியானது(சந்தை) 110 உள்ளூர் கம்பனிகள் மற்றும் 11 வெளிநாட்டு கம்பனிகள் உள்ளடக்கிய 221 வர்த்க பீடங்களை கொண்டிருந்ததுடன் அவை பாதணி, பயணப் பொருட்கள், மூலப் பொருட்கள், இயந்திரப் பொறிகள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட சேவைகளை காட்சிப்படுத்தியது. உதிரிப்பாகங்கள் மற்றும் பாகங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கும் அவர்களது உற்பத்திகளை இந்த சந்தையில் கண்காட்சிப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. நேபால்(9), இந்தியா(2) மற்றும் ஓமான்(1) ஆகிய நாடுகளைச் சேர்ந்த 12 வெளிநாட்டு கொள்வனவாளர்களும் இந்த சந்தைக்கு விஜயத்தை மேற்கொண்டனர்.

பெசன் கண்காட்ச்சி, டசைன் (வடிவமைப்பு) போட்டி மற்றும் சிறந்த விற்பனைக் கூடங்களுக்கான போட்டி ஆகியவை இந்த வைபவத்தில் விசேடமாக இடம்பெற்ற அம்சங்களாகும். பாதணி மற்றும் தோல் உற்பத்தி கைத்தொழில் பற்றிய நவீன போக்கு மற்றும் வடிவமைப்புகள் ஆகியவற்றை வெளிப்படுத்தம் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட பேசன் கண்காட்சியொன்று இந்த வைபவத்திற்கு மெருகூட்டும் வகையில் 2015 பெப்ருவரி 06ஆம் திகதி இடம்பெற்றது. முன்னைய வருடங்களில் இடம்பெற்ற பெசன் கண்காட்சிகளுடன் ஒப்பீட்டளலில் இம்முறை இடம்பெற்ற பெசன் கண்காட்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமொன்று காணப்பட்டது. இந்த கண்காட்சியானது தொழில்நுட்ப முறையில் இடம்பெற்றதுடன் சர்வதேச தரத்தையும் எட்டியுள்ளது என்பதை அதன் தொனிப்பொருளானது எடுத்தியம்பியது.

வளர்ந்துவரும் இளைய வடிவமைப்பாளர்கள் தமது திறமைகளை வெளிக்காட்டும் வகையில் சந்தர்ப்பம் ஒன்றை அவர்களுக்கு வழங்கும் முகமாக வடிவமைப்பு(டிசைன்) போட்டியொன்றும் ஒழுங்கமைக்கப்பட்டது. இந்த போட்டியானது நான்கு வகைகளின் கீழ் இடம்பெற்றதுடன் வெற்றிபெற்றோர்களுக்கு விருதுகளும் பிரதம அதிதியாக கலந்துகொண்ட கௌரவ பிரதி கைத்தொழில் வாணிப அமைச்சரால் வழங்கப்பட்டது. மிகவும் புதுமையான சிறிய தொழில் முயற்ச்சியாளர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் புதுமையான உற்பத்திகளை உற்பத்திசெய்யும் வகையில் ஊக்குவிக்கும் முகமாக முதல் மற்றும் இரண்டாம் இடங்களை கைப்பற்றிய வெற்றியாளர்களுக்கு முதற்தடவையாக விருதுகளும் வழங்கப்பட்டன.

**சர்வதேச நிறரத்தின சங்க (ICA) காங்கிரஸ் 2015**

ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது பிரதான பங்குதாரர்களுடன் இணைந்து இலங்கையை உலகில் (நீல மாணிக்கம்) சபையர் கேந்திர மையமாக நிலைநிருத்தம் நோக்கிலும் மாணிக்க ஆபரண துறையின் புகழை மேம்படுத்தம் நோக்கிலும் **சர்வதேச நிறரத்தின சங்கத்தின் 16வது காங்கிரஸ் (ICA)** 2015 ஜ 2015 மே 16 முதல் 19 வரை கொழுப்பு சின்னமன் கிரேண்ட் ஹோட்டலில் ஒழுங்குசெய்தது. இந்த வைபவத்தில் வெளிநாட்டைச் சேர்ந்த 247 பிரதிநிதிகளும் உள்நாட்டை சேர்ந்த 43 பிரதிநிதிகளும் பங்குபற்றினர். இந்த வைபவத்தை ஊக்குவிக்கும் வகையில் ஊடகம் மற்றும் ஒப்லைன் ஊடகம் ஊடாக விரிவான விளம்பர பிரசாரம் முன்னெடுக்கப்பட்டன. மேலும் **ICA காங்கிரஸ்** 2015 ற்கு சமாந்தரமாக ஒழுங்கமைக்கப்பட்ட FACETS மாணிக்க கண்காட்சிக் கூடங்களில் 29 கைத்தொழில் தொடர்பான அமர்வுகள் நடாத்தப்பட்டதுடன் 38 முன்னணி மாணிக்க ஏற்றுமதியாளர்கள் தமது ஏற்றுமதி பொருட்களை காட்சிப்படுத்தினர்.

**ஆடைத்துறை**

**ஜப்பான் மற்றும் பிரேசிலுக்கான இலங்கை ஆடைத்துறை தூதுக்குழு**

ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற பாரம்பரிய ஏற்றுமதி சந்தைகளில் அதிகளவு சார்ந்திருக்கும் தன்மையை குறைக்கும் நோக்கிலும் புதிய சந்தைகளில் பிரவேசிக்கும் நோக்கிலும் ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது கூட்டு ஆடைச்சங்க மன்றம் [JAAF] மற்றும் ஜப்பானில் அமைந்துள்ள இலங்கை தூதுவராலயம் ஆகியவற்றுடன் இணைந்து 5 உறுப்பினர் தூதுக்குழு ஒன்றை 2015 சனவரி 19 ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை [பெரிய மற்றும் நடுத்தர இலங்கை ஆடை ஏற்றுமதியாளர்கள் ] ஒழுங்குசெய்தது.

இந்த நிகழ்ச்சித்திட்டமானது ஜப்பானிய பெசன் கைத்தொழில் பற்றிய அறிவை மேம்படுத்தும் பயிற்சி அமர்வு, ஜப்பான் ஆடை சந்தைக்கான விஜயங்கள், பீ2பீ கூட்டங்கள் மற்றும் "ஜப்பானிய சர்வதேச பெசன் சந்தையில்" பங்கேற்றல் ஆகியவற்றை உள்ளடக்கியது. கண்காட்சியில் சந்தித்த கொள்வனவாளர் ஒருவர் US$ 50,000 பெறுமதிமிக்க ஓடர் ஒன்றை முன்வைப்பதற்கு இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டார். மேலும் 6ஆடை உற்பத்தி/ ஏற்றுமதி கம்பனிகள் பங்கேற்கும் பிரேஸில் சர்வதேச ஆடை கண்காட்சியில் இலங்கையின் பங்குகேற்றலையும் ஏ.அ.ச ஒழுங்கமைத்தது. மேலும் கண்காட்சிக்கு சமாந்தரமாக ஆடை உற்பத்திதுறையைச் சேர்ந்த பிரேஸில் கொள்வனவாளர் /இறக்குமதியாளர் /சில்லறை வியாபாரிகள் ஆகியோருடன் கூட்டங்களும் இடம்பெற்றன.

## சீனாவில் தொழில்நுட்ப தரவுயர்வு நிகழ்ச்சித்திட்டம்

2015 செப்டம்பர் 23 முதல் 26 வரையில் சன்கஹாய், சீனாவில் இடம்பெற்ற தொழில்நுட்ப தரவுயர்வு நிகழ்ச்சித்திட்டத்தில் இரண்டு பெரிய கம்பனிகள் உட்பட 10 உறுப்பினர்களை உள்ளடக்கிய தூதுக்குழுவின் பங்கேற்பை இலங்கை சார்பில் ஏ.அ.ச ஒழுங்கமைத்தது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது ஆடை தொழிற்சாலை ஒன்றுக்கும் இயந்திரபொறி தொழிற்சாலை ஒன்றுக்குமான விஜயத்தையும் உள்ளடக்கியது. உற்பத்தி மேம்பாட்டிற்காக சந்தையில் கிடைக்க்கூடியதாக உள்ள நவீன இயந்திரங்களை பெற்றுக்கொள்ளும் வகையில் பங்கேற்பாளர்களுக்கு அவை பற்றிய விளக்கம் வழங்கப்பட்டது. மேலும் அவர்கள் தமது உற்பத்தியை மேம்படுத்தக்கூடிவகையில் கிடைக்கக்கூடியதாக உள்ள பல்வேறு புதிய இயந்திரங்களையும் இனங்கண்டனர். இந்த இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.

## 2015 SLDF இன் ஒரு பாகமாக 2015 நவம்பர் 26-29 வரை இடம்பெற்ற "டிசைன் அன்ட சோர்ஸ் ஸ்ரீலங்கா 2015" வாங்குவோர் மாநாடு ஸ்ரீலங்கா.

JAAF மற்றும் தைக்தொழில்துறை ஆகியவற்றுடன் இணைந்து ஏ.அ.ச வாங்குபவர் மாநாடொன்றை ஒழுங்கமைத்தது. உயர் அதிகார பல்தேசிய கொள்வனவு குழுவொன்று இலங்கை ஆடை உற்பத்தியாளர்களுடன் இணைந்துள்ளது. சர்வதேச கொள்வனவு குழுவானது பிரேவில், அவுஸ்திரேலியா, இந்தியா மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகளின் சிறந்த சில்லறை விற்பனையாளர்களின் பிரதிநிதிகளை உள்ளடக்குகின்றது. இந்த கொள்வனவாளர்கள் இலங்கை ஆடை உற்பத்திகளின் உயர் தரத்தை இனங்கண்டுள்ளதுடன் அவர்கள் இலங்கை உற்பத்தியாளர்களின் தொழிற்சாலைகளுக்கான விஜயத்தை மேற்கொள்வதற்கான அனுசரணையை ஏற்றுமதி அபிவிருத்தி சபை மேற்கொண்டது. இந்த கொள்வனவாளர்கள் இலங்கையில் இடம்பெற்ற ஸ்ரீவங்கா டிசைன் பெஸ்டிவல் நிகழ்விலும் பங்குபற்றினர்.

### ஆசிய-பசுபிக் பிராந்தியத்தில் உல்லாச படகு கைத்தொழிலை மேம்படுத்தல்

படகு நிர்மாண துறைசார்ந்த சர்வதேச சந்தைக்குக்கு பிரவேசிக்கும் முகமாக படகு நிர்மாணிப்பில் இலங்கை கொண்டுள்ள திறன்களை காட்சிப்படுத்தும் நோக்கில் இக்கைத்தொழில், ஏ.அ.ச மற்றும் முதவீட்டுச் சபை ஆகியவற்றின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய 8 உறுப்பினர் தூதுக்குழுவை ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது ஏப்பிரல் 21-25 வரை சிங்கப்பூருக்கு அனுப்பியது. இந்த தூதுக்குழுவானது ஆசிய பசுபிக் படகு மாநாடு, ஆசிய படகு மன்றம் மற்றும் ICOMIA( கடற்கரை கைத்தொழில் சங்கத்தின் சர்வதேச

பேரவை) ''ஆசிய டயலொக்'' ஆகியவற்றில் பங்கேற்றது. மேலும் அவர்கள் சிங்கப்பூர் படகு கண்காட்சி 2015 இலும் பங்குபெற்றும் வாய்ப்பை பெற்றனர்.

மேலும் இந்த கைத்தொழில் பற்றிய அறிவை மேம்படுத்தியதுடன் மெரினா டிவலொப்பர்ஸ், பொன்டுன் உற்பத்தியாளர்கள் மற்றும் மெரினா முதலீட்டாளர்கள் ஆகியோருடன் 4 கூட்டங்களும் இந்த காலகட்டத்தில் இடம்பெற்றன.

## மாணிக்கம் மற்றும் ஆபரணம்

ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது பெசட்ஸ் ஸ்ரீலங்கா சர்வதேச மாணிக்கம் மற்றும் ஆபரணம் கண்காட்சியை இணை-அனுசரணையுடன் 2015 செப்டெம்பர் மாதத்தில் ஒழுங்கமைத்ததுடன் சிறிய நடுத்தர தொழில்முயற்சிசார் ஆபரண உற்பத்தியாளர்கள் மற்றும் 07 ஆபரண வடிவமைப்பாளர்கள் ஆகியோருக்கு விசேட பார்வைக்கூடத்தையும் ஒழுங்கமைத்தது. இதன் மூலம் ரூபா 5.84 மில்லியன் பெறுமதியான உடணடி விற்பனை இடம்பெற்றதுடன் ரூபா 1.5 மில்லியன் பெறுமதியான ஓடர்களையும் பெற்றுக்கொண்டது. கணடாவுக்கான மாதிரி ஓடரை பெற்றுக்கொண்டதுடன் இரண்டு சாத்தியமான கொள்வனவாளர்களையும் புபுது கைவிணை கம்பனியுடன் இணைத்தது. பெசட்ஸ் ஸ்ரீலங்கா 2015 ஐ ஊக்குவிக்கும் வகையிலும் சாத்தியமான கொள்வனவாளர்களை அணுகவும் ICA கலர் சஞ்சிகையில் முழுப்பக்க வண்ண விளம்பரத்யையும் பிரசுரித்தது.

## மூல உலோக உற்பத்திகள் [இலகு பொறியியல்]

வார்ப்பின் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் வார்ப்பு இரசாணப்பொருட்களின் பயன்பாடு பற்றிய செயலமர்வு ஒன்றை ஏ.அ.ச ஏப்பிரல் 24ஆம் திகதி ஏக்கலை NERD நிலையத்தில் ஒழுங்கமைத்தது. இந்த பயிற்சிப்பட்டறையில் 30 மூல உலோக கம்பனிகளை சேர்ந்த 45 உறுப்பினர்கள் பங்குபற்றினர். இந்த பயிற்சி பட்டறையானது இந்திய FOSECO நிறுனத்தின் நிபுணர்களால் நடாத்தப்பட்டது.செயலமர்வுக்கு முன்னர் நிபுணர்கள் 6 கம்பனிகளுக்கு விஜயத்தை மேற்கொண்டு வார்ப்பு மற்றும் செலவினத்தை குறைத்தல் பற்றிய ஆலோசனையை வழங்கினர்.

## தூய இலங்கை கறுவா

ஜேர்மனியில் இடம்பெற்ற அனுகா டிரேட் கண்காட்சியில் தூய கருவாபட்டை வகையை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டதுடன் ஜேர்மன் சமையற்கலை நிபுணர் மற்றும் 80 உறுப்பினர்கள் பங்கேற்புடன் சமையற்கலை கண்காட்சியும் நடாத்தப்பட்டது. மேலும் பொதுமக்கள் இடையில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சிலோன் கறுவா உற்பத்தி கண்காட்சியானது இத்தாலி மிலான் நகரத்தில் இடம்பெற்ற சர்வதேச வர்த்தக கண்காட்சியான ''வேர்ல்ட் எக்ஸ்போ 2015'' இல் இடம்பெற்றது.

## “தூய சிலோன் கறுவா”((PCC)லோகோவை வெளியிடல்

ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது தகுதிவாய்ந்த ஏற்றுமதியாளர்களுக்கு அவர்களின் சேர் பெறுமதி கறுவா ஏற்றுமதிகளில் தூய சிலோன் கறுவா லோகோவை[PCC Logo] பயன்படுத்துவதற்காக உரிமங்களை வழங்கியது. இந்த லோகோவானது தூய கறுவா உற்பத்தி எங்கிருந்து தோன்றுகின்றது என்பதை உலக சந்தைக்கு காட்டுகின்றது. அத்துடன் (PCC logo) லோகோவை பயன்படுத்தவதற்கான் விதிகள் மற்றும நிபந்தனைகள் ஆகியவற்றையும் ஏ.அ.ச விதித்தது. PCC லோகோவை பயன்படுத்துவதாயின் உரிமங்கள் வருடாந்தம் புதுப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் ஏனைய ஒழுங்கமைப்பு தேவைகளும் அவசியமாக பின்பற்றப்படல் வேண்டும். இந்த காலத்தில் உரிமத்தை கொண்டிருந்த 13 உரிமையாளர்கள் அடுத்த வருத்திற்காக அவற்றை புதுப்பித்துக் கொண்டார்கள்.

உற்பத்தி செயன்முறையின் தரத்தை மேம்படுத்தும் வகையில் GTZ தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கு பிரேரணையொன்று தயாரிக்கப்பட்டு அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கைத்தொழிலை மேம்படுத்தவதற்காக UNIDO வுடன் கூட்டமொன்று இடம்பெற்றது. UNIDO வின் ஆலோசகர் "PCC" லயன் போகோ’’ தொடர்பான புதிய பிரேரணை பற்றிய அவரின் அறிக்கையை பங்குதாரர்களுக்கும் உரிமத்தை உடையோருக்கும் சமர்ப்பித்தார்.

## தோட்டக்கலை

‘‘ஏற்றுமதி சந்தையைக்கு வழிசமைக்கும் மலர்ச்செடிகளை பயிரிட்டு அவற்றின் உற்பத்தி/தரம் ஆகியவற்றை மேம்படுத்தல்’’ பற்றிய நிகழ்ச்சித்திட்டம் ஒன்று ஆசிய உற்பத்தி தாபனத்தின் [APO] கலந்துரையாடலுடன் ஏற்றுமதி அபிவிருத்தி சபையால் 2015 மார்ச் 10-14 வரை ஒழுங்கமைக்கப்பட்டது. இந்த நிகழ்சித்திட்டம் கள விஜயங்கள், செயலமர்வுகள் மற்றும் தொழில்நுட்ப அமர்வுகள் ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது.

## ஏற்றுமதி சேவை

**ICT/BPO துறை-** “கலாசாரங்களுக்கு இடையில் உங்கள் வியாபாரத்தை வெற்றிகரமாக முன்நிறுத்தங்கள்’’ பற்றிய செயலமர்வொன்று தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறை கம்பனிகளுக்காக NDB-EDB டவர் மண்டப கேட்போர் கூடத்தில் 2015 பெப்ரவரி 19 மற்றும் 20ஆம் திகதிகளில் ஒழுங்கமைக்கப்பட்டது. 32 கம்பனிகளின் பிரதிநிதிகள் இந்த செயலமர்வில் கலந்து கொண்டனர். இந்த பயிற்சிபட்டறையின் செலவினத்தை CBI நெதர்லாந்து ஏற்றுக்கொண்டது.

‘‘மனித வள முகாமைத்துவம்’’ பற்றிய ACBI செயலமர்வு ஒன்று இத்துறையை பிரதிநிதித்துவம் செய்யும் 25 உறுப்பினர்களின் பங்கேற்றலுடன் மே 7 மற்றும் 8ஆம் திகதிகளில் ஒழுங்கமைக்கப்பட்டது. CBI ஆலோசகர்கள் கம்பனிகள் 06ற்கு விஜயம் மேற்கொள்வதற்கான நிகழ்ச்சித்திட்டம் ஒன்று ஏற்றுமதி கோசிங் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2015 மே 12 மற்றும் 15 ஆம் திகதிகளில் ஒழுங்கடைக்கப்பட்டது.

கருத்திட்ட முகாமைத்துவம் பற்றிய CBI பயிற்சிப்பட்டறை ICT/BPM துறையைச் சேர்ந்த 30 பங்கேற்பாளர்களுடன் வெற்றிகரமாக ஒக்டோபர் 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் நிறைவேற்றப்பட்டது.

PWC உடனான ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டுள்ளது அத்துடன் இலங்கை ICT/PO துறையியால் (ஏற்றுமதி பெறுமதி அளவை) தோற்றுவிக்கப்பட்ட ஏற்றுமதிழகளின் பெறுமதியை உறுதிசெய்யும் முகமாக அளவை பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலதிக பரிந்துரைக்காக வரைவு அறிக்கையை PWC தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப குழுவிற்கு சமர்ப்பிக்கவுள்ளது.

மேலும் டோக்கியோ ஜப்பானில் இடம்பெறும் CEATEC கண்காட்சியில் பங்குபற்றுதலுக்கு மேலதிகமாக பங்கேற்பாளர்கள் செயலமர்வுகள் மற்றும் வலையமைப்பு அமர்வுகள் ஆகியவற்றிலும் பங்கேற்பதற்கான சந்தர்ப்பத்தையும் பெற்றனர்.
APICTA வியாபார செயலமர்வு மற்றும் வலையமைப்பு கூட்டங்கள் ஆகியன 50 உள்ளூர் கம்பனிகளின் பங்கேற்றலுடன் நவம்பர் 20-21 வரை சின்னமன் லேக்சைட் ஹோட்டல், கொழும்பில் இடம்பெற்றது.

**இலத்திரணியல் உற்பத்திகள்**

கைத்தொழில் மற்றும் துணை எல்லைகள் பற்றிய பேஸ்லைன் அளவையொன்று நடாத்தப்பட்டு முடிக்கப்பட்டது- 70 மின், இலத்திரனியல் மற்றும் உயர்-தொழில்நுட்ப கம்பனிகளுக்கு விஜயம் மேற்கொள்ளப்பட்டது. கைத்தொழில் துறை முகம் கொடுத்த பிரச்சினைகள் பற்றிய கலந்துரையாடல் இடம்பெற்றதுடன் அப்பிரச்சினைகளுக்கு பொறுப்பான அதிகாரசபைகளுடன் அவை கலந்துரையாடப்படவும் உள்ளன. மேலும் இப்பிரச்சினையை தீர்ப்பதற்கு அரசாங்கத்திடம் இருந்து தேவைப்படும் உதவிகள் பற்றியும் கலந்துரையாடப்படவும் உள்ளது.

## அச்சிடல் மற்றும் வெளியிடல்(பிரசுரித்தல்)

அச்சிடல் துறையைச் சேர்ந்த 60 தொழில்முயற்சியாளர்களுக்கான செயலமர்வு ஒன்று ஏ.அ.ச கேட்போர்கூடத்தில் 2015 பெப்ரவரி 17ஆம் திகதி ஒழுங்கமைக்கப்பட்டது. அச்சிடல் துறை ஏற்றுமதியாளர்களுக்கு காணப்படும் உலகலாவிய வாய்புகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் வியாபாரத்தில் பேரம்பேசும் தொழில்முயற்சியாளர் திறன்களை மேம்படுத்துவதும் இந்த செயலமர்வின் பிரதான நோக்கம் ஆகும்.

**சந்தை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்**

ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது மீளாய்வுக்கு உட்பட்ட இந்த காலத்தில் தற்போதைய, புதிய மற்றும் மேலெழும் சந்தைகளில் இலங்கை உற்பத்திகள் மற்றும் சேவைகள் வெற்றிகரமாக உட்பிரவேசிப்பதை உறுதிசெய்யும் வகையில் பின்வரும் சந்தை ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது.

மீளாய்வுக்கு உட்பட்ட காலத்தின் போது பின்வரும் வர்த்தக சந்தைகளில் பங்கேற்றல்.

**ஐ.ஓ பிராந்தியம்:**

| | |
|---|---|
| 2015 சனவரி 27-31, IPM எசன் பெயார் 2015 | 8 ஏற்றுமதியாளர்கள் |
| இத்தாலி – மிலானோ எஸ்போ 2015 உற்பத்தி காட்சிப்படுத்தல் | 6 ஏற்றுமதியாளர்கள் |
| சமர் பென்சி உணவு கண்காட்சி 2015,வாசிங்டன்,ஐ.அ – யூன்28-30 | 7 ஏற்றுமதியாளர்கள் |
| அனுகா வர்த்தக சந்தை , கொலன்கே,ஜேர்மனி, 2015 ஒக்டோபர் 10-14 | 15 ஏற்றுமதியாளர்கள் |
| புட் இன்கிரிடியன்ட் - ஐரோப்பா - 2015 திசம்பர் 1-3 | 04 ஏற்றுமதி கம்பனிகள் மற்றும் 02 பார்வையாளர்கள் |

**ஆசிய பிராந்நியம்:**

| | |
|---|---|
| சீனா –பீஜிங் சர்வதேச சேதன மற்றும் பச்சை உணவு கைத்தொழில் எக்ஸ்போ,2015 ஏப்பரல் 16-18 | 7 ஏற்றுமதியாளர்கள் |
| FOODEX 2015, சிபா, ஜப்பான்,2015 மார்ச் 3-6 | 6 ஏற்றுமதியாளர்கள் |
| சர்வதேச தோட்டக்கலை கோயேங் (IHK) கண்காட்சி, ஏப்பிரல் 24- மே 10 | 3 ஏற்றுமதியாளர்கள் |
| இந்திய இறப்பர்EXPO 2015 - 2015சனவரி 15-17 | 4 ஏற்றுமதியாளர்கள |
| ICCF 2015 வர்த்தக சந்தை , பெஙகளுர் இந்தியா – 2015 மே 1-10 | 24 SMEs |
| SIAL 2015, சீனா – 2015மே 6-8 | 5 ஏற்றுமதியாளர்கள் |
| அகுவாரமா 2015 மே | 15 ஏற்றுமதியாளர்கள் மற்றும் வளர்ப்பாளர்கள் |
| EXPO பாகிஸ்தான் –2015 பெப்ரவரி 26 மார்ச் 01 | 4 ஏற்றுமதியாளர்கள் |
| ஜப்பான் IT வாரம் | 5 ஏற்றுமதியாளர்கள |
| சர்வதேச கார்டன் எக்ஸ்போ, டோக்கியோ–ஒக்டோபர் 13-17 | 6 ஏற்றுமதியாளர்கள் |
| 3 வது சீன தென் ஆசிய எக்ஸ்போ(CSAE) 2015 | 123 ஏற்றுமதியாளர்கள் |
| CEATEC கண்காட்சி ,டோக்கியோ, ஜப்பான் – 2015 ஒக்டோபர் 5-10 | 6 ICT கம்பனிகள் |
| Myanbuid 2015, Yangon, மியன்மார்– 2015 திசம்பர் 3-5 | 10 நிர்மாணம் கம்பனிகள் |
| மாலைதீவில் இலங்கை கல்வி பற்றிய ஊக்குவிப்பு – 2015 யூன் 7-8 | 24 கல்வி நிறுவனங்கள் |
| உலக உணவு, சர்வதேச உணவு மற்றும் பாணம் கண்காட்சி 2015, மொஸ்கோ,எக்ஸ்போ நிலையம், ரஸ்யா பெடரேசன்–2015 செப்டெம்பர்14-17 | 12 கம்பனிகள் |
| SAARC வர்த்தக சந்தை2015,லாகுர், பாகிஸ்தான் – 2015 திசம்பர் 4-6 | |

| | |
|---|---|
| சன்கஹஹய் கூட்டுத்தாபன தாபனம் (SCO) சாடுகளின் பண்டப்பபொருள் சந்தை | 15 கம்பனிகள் |
| இந்திய சர்வதேச வர்த்தக சந்தை [IIFT] - 2015,புது டில்லி, இந்தியா - 2015நவம்பர் 14-17 | 6 கம்பனிகள் |

**மத்திய கிழக்கு, CIS மற்றும் அபிரிக்க பிராந்தியம்:**

| | |
|---|---|
| வலைகுடா உணவு, துபாய், UAE 2015, 2015 பெப்ரவரி 8-12 | 26 ஏற்றுமதியாளர்கள் |
| பேப்பர் வேர்ல்ட், துபாய் 2015 | 6 ஏற்றுமதியாளர்கள் |
| தென் ஆபிர்க்க சர்வதேச வர்த்தக கண்காட்சி(SAITEX) ஜோஹர்னாஸ்பரக், தென் ஆபிரிக்கா- 2015 யூன் 21-23 | 7 ஏற்றுமதியாளர்கள் |
| GITEX தொழில்நுட்ப வாரம்2015,துபாய் ஒக்டோபர் 18-22 | 5 ஏற்றுமதியாளர்கள் |

**ஐக்கிய அமெரிக்க இராஜ்ய பிராந்தியம்:**

| | |
|---|---|
| கோடைகால பென்சி உணவு கண்காட்சி 2015, வாசிங்டன்,, ஐக்கிய அமெரிக்கா 2015 யூன் 28-30 | 7 ஏற்றுமதியாளர்கள் |
| பிரேசில் சர்வதேச ஆடை வெளிச்சேவை கண்காட்சி | 6 ஏற்றுமதியாளர்கள் |

**பாரிய சந்தை ஊக்குவிப்பு நிகழ்சித்திட்டம்**

**வலைகுடா உணவு 2015**





இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை மற்றும் இலங்கை தேயிலை சபை ஆகியன துபாயில் தாபிக்கப்பட்டள்ள துணை தூதரகத்துடன் இணைந்து தேயிலை மற்றும் உணவு வகைகளை ஊக்குவிக்கும் முகமாக இலங்கையின் பங்கேற்பை பெப்ரவரி 8-12 வரை இடம்பெற்ற வலைகுடா உணவு 2015 இல் ஒழுங்கமைத்தது. இந்த செயற்பாடானது குறிப்பிடத்தக்க வர்த்தக நன்மைகளை பெற்றுக்கொள்வதில் வெற்றிகரமாக செயற்பட்டது.

இலங்கை பார்வைக்கூடம் தேயிலை(தேநீர்), நறுமணச்சரக்கு, பதனிடப்பட்ட உணவு, உணவு மற்றும் மென் பானங்கள், பிஸ்கட் வகைகள், தூய தேங்காய் எண்ணெய், மூலிகை உற்பத்திகள் ஆகிய உணவு மற்றும் பான உற்பத்திகளை உள்ளடக்கி இருந்தது. இந்த கண்காட்சியில் இலங்கை ஏற்றுமதியாளர்கள் பங்குபற்றிதுடன் அதற்கு மேலதிகமாக உலகலாவிய ஹலால் சந்தையில் காணப்படும் சந்தை வாய்புகள் மற்றும் இஸ்லாமிய பொருளாதாரத்தில் கேந்திரமாக அமைவதற்கான துபாயின் தூரநோக்கில் ஹலாலின் வகிபாகம் பற்றிய கலந்துரையாடல் இடம்பெற்ற ஹலால் முதலீட்டு மாநாடு உட்பட பல்வேறு மாநாடுகளிலும் பங்கேற்கும் வாய்ப்பையும் பெற்றனர்.

மேலும் இலங்கை ஏற்றுமதியாளர்கள் ஐக்கிய அரபு எமிரேட் சாரந்த கம்பனிகள், இலங்கை வர்த்தக பேரவை மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ்டில் காணப்படும் இலங்கை நிபுணத்தவ தாபனங்கள் ஆகியவற்றின் பங்களிப்புடன் ரஸ் ஹல் கைமா சுதந்திர வரத்தக வலயத்தால்(RAz Al Khaimah Free Trade Zone) ஒழுங்கு செய்யப்பட்ட வர்த்தக வலையமைப்பு கூட்டங்களில் பங்குபற்றும் வாய்ப்பையும் பெற்றனர்.

**3வது *சீன* தென் ஆசிய எக்ஸ்போ 2015**





ஏற்றுமத் அபிவிருத்தி சபையானது சீனாவில் தாபிக்கப்பட்டுள்ள இலங்கை தூதுவராலயத்துடன் இணைந்து தென் ஆசிய வர்த்தக சந்தை Kungmin, Chinawith 128 வர்த்தக பீடங்களில் இலங்கையின் பங்கேற்றலை ஒழுங்கமைத்தது. இந்த சந்தையானது வானிப் அமைச்சு மற்றும் Yunan மாகாண அரசாங்கம் இணைந்து தென் ஆசிய நாடுகளில் இருந்து சீனாவின் இறக்குமதியை விஸ்தரிக்கும் நோக்கில் ஒழுங்கமைக்கப்பட்டது. இந்த வருடம் இலங்கை பார்வைக்கூடத்தின் கீழ் மாணிக்கம் மற்றும் ஆபரணம் [92], தேயிலை[14], கைவிணை பொருட்கள் [13], ஏனையவை[4] ஆகிய துறைகளை பிரதிநிதித்தவம் செய்யும் 122 தனியார் துறை கம்பனிகள் அவர்களின் உற்பத்திகளை கண்காட்சிக்கு வைத்தனர்.

Kunming இல் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாணிக்கம் மற்றும் ஆபரணம், கைவிணைப் பொருள் உற்பத்திகள், சேர் பெறுமதி தேயிலை மற்றும் தென்னை சார்ந்த உற்பத்திகள் ஆகிய துறைகள் சிறப்பாக செயற்பட்டன. இந்த நிகழ்வானது சர்வதேச அனுபவத்தை மலிவாக பெற்றுக்கொள்ளவும் உடணடி வர்த்தகத்தை மேற்கொள்ளவும் அவர்களுக்கு சந்தரப்பம் ஒன்றை வழங்குவதால் இலங்கையின் ஏற்றுமதி சமூகமானது விசேடமாக சிறிய நடுத்தர தொழில்முயற்சி துறையானது இந்த வருடாந்த நிகழ்வை ஆவலுடன் எதிர்பார்துள்ளது. இந்த வருடத்தில் இலங்கையின் காட்சிக்கூடத்திற்கு பெரும் தொகையான பார்வையாளர்கள் ஐந்து நாட்களிலும் வருகை தந்தனர். தேயிலை துறை கம்பனிகள் சிறந்த வர்த்தக தொடர்புகளை தாபிக்கவும் மாணிக்கம் மற்றும் ஆபரணத் துறை மற்றும் கைவிணை துறை கம்பனிகள் உடணடி விற்பனையை மேற்கொள்ளவும் கூடியதாக இருந்தன.

இந்த நிகழ்வானது சீன வர்த்தக சமூத்தின் மத்தியில் இலங்கையில் காணப்படும் முதலீட்டு வாய்ப்புகள் பற்றிய வழிப்புள்ர்வை ஏற்படுத்த சிறந்த மேடையை வழங்கியது அத்துடன் முதலீட்டு சபை பீடத்தில் முதலீடுகள் பற்றிய பல விசாரணைகளும் இடம்பெற்றன. இலங்கை ஏயார் லைன் பார்வையாளர் மத்தியில் சிறந்த தாக்கத்தை செலுத்தியதுடன் கொழும்புக்கான அவர்களின் நேரடி விமான சேவை பற்றிய விழிப்புணர்வையும் ஏற்படுத்தியது.

இதற்கு மேலதிகமாக, இலங்கை ஏற்றுமதியாளர்கள் இந்த சந்தைக்கு சமாந்தரமாக ஏற்பாடு செய்திருந்த சீன தென் ஆசிய வர்த்தக மன்றத்தில் பங்கேற்கும் சந்தர்ப்பத்தையும் பெற்றனர். இந்த மன்றத்தில் ஏ.அ.ச தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ''ஸ்ரீலங்கா கெனக்ட்ஸ் டு சில்க் ரோட் இகோகோமிக் பெல்ட்'' பற்றிய பத்திரமொன்றை சமர்ப்பித்தனர்.

**உள்வாரி கொள்வனவு தூதுக்குழு**

பின்வரும் உள்வாரி கொள்வனவு தூதுக்குழுக்கள் ஏ.அ.ச யால் ஒழுங்குசெய்யப்பட்டன.

- மும்பாய், இந்திய வர்த்தக பேரவையில் இருந்து 11 உறுப்பியர்கள் அடங்கிய தூதுக்குழு ஒன்று சனவரியில் இலங்கையில் விஜயத்தை மேற்கொண்டு இலங்கை கம்பனிகளுடன் B2B கூட்டங்கள் நடாத்தின
- 3வது CSAE கூட்டத்தை இலங்கை பங்குதாரர்களுடன் ஊக்குவிக்கும் முகமாக Yunnan மாகாணத்தில் இருந்து சீன உத்தியோகபூர்வ தூதுக்குழு 2015 சகவரியில் விஜயத்தை மேற்கொண்டது.
- Yunnan மாகாணத்தில் இருந்து சீன உத்தியோகபூர்வ தூதுக்குழ் 3வது CSAE தை அனைத்து பங்குதார்களுடன் 2015 மார்ச் 6.
- B2B கூட்டங்களை 12 இலங்கை கம்பனிகளுடன் நடாத்துவதற்காக சீன வர்த்தக தூதுக்குழு மார்ச் 25 இல் விஜயம்
- B2B கூட்டங்களை இலங்கை கடற்றொழில் மற்றும் நிர்மாண கம்கனிகளுடன் நடாத்துவதற்கு சீன வர்த்தக தூதுக்குழுவொன்று ஏப்பிரல் 20 இல் விஜயம்
- B2B கூட்டங்களை கடற்றொழில் மற்றும் தேயிலை ஏற்றுமதியாளர்கள் மத்தியில் ஏற்படுத்த கொரியன் கம்பனியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஒருவர் மாரச் 26 விஜயம் மேற்கொண்டார்
- பாதணி கண்காட்சிக்காக உள்வாரி தூதுக்குழு ஒழுங்கமைக்கப்பட்டது. [ஓமான்,இந்தியா மற்றும் நேபால் நாடுகளில் இருந்து 12 வாங்குநர்கள்]
- ஹன்டர் அன்ட் ஹான் கெபிடல் பார்ட்னர்ஸ் AB, சுவீடன், B2B கூட்டங்கள் ஒழுங்கமைப்பு
- சீனா அரோமா வர்த்தக சங்கத்தில் இருந்து தூதுக்குழு இலங்கையில் விஜயம் மேற்கொண்டு இலங்கை கம்பனிகளுடன் கூட்டங்களை நடாத்தியது.

**இலத்திரனியல் சந்தை பகுதி**

ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தகவல் தொழில்நுட்ப பிரிவானது இலங்கை உற்பத்திகள் மற்றும் சேவைகளை இணையத்தின் வழியாக உலக சந்தையில் ஊக்குவிக்கும் முகமாக புதிய சந்தைபடுத்தல் கருவிகளை அறிமுகம் செய்தது. 1950 ஏற்றுமதியாளர்களுக்கு இடையில் இலத்திரனியல்-ப்லையர் ஒன்று( E-flyer) பரிமாற்றம் செய்யப்பட்டு அதன் ஊடாக அவர்களை ஏ.அ.ச

இ-சந்தை பகுதியில் இணையுமாறு மேண்டுகோள் விடுக்கப்பட்டது. இந்த காலத்தில் ஒன்பது உறுப்பினர்கள் இ-சந்தை பகுதியில் இணைந்ததுடன் ஜேர்மனி, ஜப்பான், சேர்பியா, குவைட், கட்டார், பிரான்ஸ், ஸ்பெயின், ஸ்லோவாக்கியா, சுவிட்சர்லாந்து, ஹொங்கொஹ், தென் ஆபிரிக்கா, பிலிப்பைன்ஸ், அவுஸ்திரேலியா, இந்தியா, ஐக்கிய அமெரிக்கா, மற்றும் ஒஸ்ரியா ஆகிய நாடுகளிடம் இருந்து ஆயர்வேதம் மற்றும் மூலிகை உற்பத்திகள் தொடர்பில் US$ 3380.58 பெறுமதிமிக்க இருபத்து மூன்று புதிய கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றுள்ளன.

## தொழில் முயற்ச்சியாளர்களின் பிரச்சினைகளை தீர்த்தல்: ஏற்றுமதியாளர் மன்றம்

இந்த துறையைச் சேர்ந்த குறிப்பிடத்தக்க பிரச்சினைகளை கலந்துரையாடி அவற்றுக்கு பரிகாரம் காணுமொரு பொது மன்றமாக 6வது மற்றும் 7வது ஏற்றுமதியாளர் மன்றமானது கௌரவ சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சரின் தலைமையின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டது. இந்த மன்றத்தில் ஏற்றுமதியாளர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் ஏனைய தொழில் முயற்ச்சியாளர்கள் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட தனியார் நிறுவனங்கள் சமுகமளித்தன. இந்த காலத்தில் 02 மன்றங்கள் இடம்பெற்றதுடன் மொத்தமாக 88 பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டன.

### பொதியிடல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

- சர்வதேச சந்தைக்கான பழங்கள் மற்றும் மரக்கறி ஏற்றுமதி பொதியிடல் பற்றிய செயலமர்வொன்று ஏற்றுமதியாளர்கள், பொதியிட்ட பொருட்கள் விநியோகத்தர்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் உட்பட 70 பங்கேற்பாளர்களுடன் 2015 ஏப்பிரல் 08ஆம் திகதி நடாத்தப்பட்டது. இளைஞர் விவகாரம் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் வேண்டுகோளுக்கு இணங்க காலி மாவட்டத்தைச் சேர்ந்த 60 சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்ச்சியாளர்களுக்கு பொதியிடல் பற்றிய செயலமர்வொன்று 2015 யூன் 13ஆம் திகதி நடாத்தப்பட்டது.
- இளைஞர் விவகாரம் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் வேண்டுகோளுக்கு இணங்க தங்காலையை சேர்ந்த 50 சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்ச்சியாளர்களுக்கு பொதியிடல் பற்றிய செயலமர்வொன்று 2015 ஆகஸ்ட் 22 ஆம் திகதி ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் நடாத்தப்பட்டது.
- இளைஞர் விவகாரம் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் வேண்டுகோளுக்கு இணங்க புத்தளம் மற்றும் கலுத்தரை மாவட்டங்களில் இரண்டு செயலமர்வுகள் 2015 நவம்பர் 15 மற்றும் 2015 திகம்பர் 12 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டன. ஹலாவத்தையில் 50 சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்ச்சியாளர்களுக்கும் பானதுறையில் 60 சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்ச்சியாளர்களுக்கும் இவை நடாத்தப்பட்டன.

### பிராந்திய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் பிராந்திய மட்டங்களில் நடாத்தப்பட்டன.

- ‘‘பூக்கள் மற்றும் அலங்கார செடிவகைளை வெட்டுக’’ பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் ஒன்று இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த 58 சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்ச்சியாளர் பங்கேற்புடன் ஒழுங்கமைக்கப்பட்டது.
- ஏற்றுமதி சார்ந்த சேர்பெறுமதி அன்னாசி மற்றும் அன்னாசி உற்பத்திகள் விநியோகத்தர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்று கலுத்தரை மாவட்டத்தில் 58 சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்ச்சியாளர் பங்கேற்புடன் ஒழுங்கமைக்கப்பட்டது.
- இஞ்சி, மஞ்சள் மற்றும் சேவியப்புள் துறை உற்பத்திகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் ஒன்று கேகாலை, கண்டி, மாத்தலை, நுவரெலியா மாவட்ங்களில் 982 பண்ணையாளர்களுக்கு நடாத்தப்பட்டன.
- அலங்கார செடிவகை துறையை சேர்ந்த 62 பண்ணையாளர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் பின்தொடர் நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டதுடன் மாத்தலை பி.செ பிரிவைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட

கமக்காரர்களுக்கு துல்வின் மலர்கள் ஏற்றுமதி கம்பனிகளுடன் இணைப்பு நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டன.

- வட மத்திய வாகாண பதிக்(பரிசில் வகை) உற்பத்தியாளர்களுக்கு அவர்களின் திறனை உள்ளூர் சந்தைக்கு மேலோங்கச் செய்லதற்கான வடிவமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்-1வது கட்டத்தின் கீழ் 75 சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்ச்சியாளர்களுக்கு(சி.ந.தொ.மு) விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் ஒன்று ஒழுங்கமைக்கப்பட்டது. இரண்டாம் கட்டத்தின் கீழ் 15 சி.ந.தொ.மு பதிக் உற்பத்தியாளர்களின் பங்கேற்புடன் ஒரு நாள் செயலமர்வும் மாதிரி காட்சி நிகழ்வும் நடாத்தப்பட்டது.
- இலங்கை தேயிலை சபை, இலங்கை கட்டளை நிறுவகம் மற்றும் தேசிய பொதியிடல் நிலையம் அகியவற்றின் ஒத்துழைப்புடன் 75 பயனாளிகள் பங்கேற்றலுடன் ஏற்றுமதி சந்தை, பொதியிடல், தரம் மற்றும் ஏற்றுமதி செயன்முறை பற்றிய விழிப்புணர்வு செயலமர்வு நடாத்தப்பட்டது.
- ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் (தும்பு) நார் மற்றும் நார் சார்ந்த உற்பத்திகள் மீதான சேர் பெறுமதி உற்பத்திகள் அபிவிருத்திப பற்றிய நிகழ்ச்சித்திட்டம் -பெண் தொழில்முயற்சியாளர் நன்மைக்காக ஏற்றுமதி இணைப்பு ஆதரவு பயிற்சிகள் இரண்டு ஒழுங்கமைக்கப்பட்டது.
- ஹம்பாந்தோட்டையில் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த கைத்தொழில்களுக்காக ஏற்றுமதி வாய்ப்புகள் மற்றும் நன்மைகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் 30 பங்கேற்பாளர்களுக்கு நடாத்தப்பட்டது. ஹல்துமுல்லை பிரதேசத்தில் பாரிய அளவிலான மிளகு பயிர்செய்கையாளர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் ஒழுங்கமைக்கப்பட்டது.
- வட மாகாணத்தை சேர்ந்த 75 சி.ந.தொ.மு ஏற்றுமதி வாய்ப்புகள்,ஏற்றுமதி செயன்முறை மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் பற்றிய விழிப்புணர்வு செயலமர்வு ஒன்று 2015 மார்ச் 18 மற்றும் 19ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் மற்றும் மன்னாரில் ஒழுங்கமைக்கப்பட்டது- யாழ்ப்பாணம் மாவட்டத்தில இருந்து 75 சி.ந.தொ.மு மற்றும் மன்னார் மாட்டத்தில் இருந்து 60 சி.ந.தொ.முயற்சியாளர்களும் இந்த செயலமர்வில் பங்கேற்றனர்.
- கிழக்கு மாகாணத்தில் 20 அரிசி மற்றும் அரிசி சார்ந்த உற்பத்தியாளர்களுக்கு அரிசி மற்றும் அரிசி சார் உற்பத்திகள் பற்றிய தொழில்நுட்ப பர்மாற்ற நிகழ்ச்சித்திட்டம் 2015 திசம்பர் 4-5 வரை ஒழுங்கு செய்யப்பட்டது.
- கலுத்தறை மாவட்டத்தில் 58 சி.ந.தொ.முயற்சிகளுக்கு ஏற்றுமதி சார்ந்த சேர் பெறுமதி அன்னாசி மற்றும் அன்னாசி உற்பத்தி விநியோகத்தர்கள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்
- வட மத்திய மாகாணத்தில் ஏற்றுமதி சாத்தியமுள்ள கற்றோருக்கான ICT/BPO துறை ஏற்றுமதி வாய்ப்புகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்
- குளியாபிடிய கிழக்கில் மிளகு ஏற்றுமதி சந்தை பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் 30 கமக்காரர்களுக்கு.
- சிலாபத்தை சேர்ந்த 15 பங்கேற்பாளர்களுக்கு இஞ்சி ஏற்றுமதி சந்தை பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்.
- ஏற்றுமதி சந்தைக்கான அழங்கார மீன் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நாத்தான்டியவை சேர்ந்த 50 பயிர்செய்கையாளர்களுக்கு
- ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு(சி.ந.தொ.மு) தகவல் தொழில்நுட்பம் தொடர்பான ஏற்றுமதி வாய்ப்புகள் மற்றும் நன்மைகள் பற்றிய செயலமர்வு.
- பதுலை மாவட்டத்தை சேர்ந்த பண்டாரவளை, ஹப்புத்தலை, வெளிமடை, மற்றும் ஹல்துமுள்ளை பிரதேசங்களில் குடைமிளகாய்(மிளகு),தக்காளி மற்றும் வெள்ளரிக்காய் தொடர்பில் உயர் பெறுமதி காணப்படும் மரக்கறி கமக்காரர்களுக்கு தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் ஏற்றுமதியாளர் இணைப்பு நிகழ்ச்சித்திட்டம்
- காலியை சேர்ந்த 28 சி.ந.தொ.மு மட்ட மாணிக்கம் மற்றும் ஆபரண உற்பத்தியாளர்கள் / வடிவமைப்பாளர்களுக்கு உலக சந்தையை இலக்குவைத்து ஆக்கப்படைப்பு ஆபரண வடிவமைப்பு மற்றும் போட்டித்தன்மையான உற்பத்திகள் பற்றிய பயிற்சிப்பட்டறை ஒன்று நடாத்தப்பட்டது.
- காலி, கண்டி மற்றும் கொழும்பு ஆகிய பிரதேசங்களில் பிராந்தியம் சார்ந்த ஏற்றுமதிசார் தொழில்முனைவர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் பற்றிய மூன்று பயிற்சிப்பட்டறைகள் நடாத்தப்பட்டன.

- 20 சாத்தியமுள்ள பாதணி உற்பத்தியாளர்களுக்கு பாதணி மற்றும் தோல் உற்பத்தி தொடர்பில் உற்பத்தி மற்றும் வடிவமைப்பு அபிவிருத்தி பற்றிய ஒரு நாள் மற்றும் மூன்று நாள் நிகழ்ச்சித்திட்டம் வட மேல் மாகாணம் /வட மத்திய மாகாணத்தில் நடாத்தப்பட்டது.

**ஏற்றுமதி சார் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்**

- ''ஏற்றுமதி இறக்குமதி செயன்முறைகள் பற்றிய சான்றிதழ் பாடநெறி'' தொடர்பான மூன்று நிகழ்ச்சித்திட்டங்களை( 136வது, 137வது மற்றும் 138வது) ஏற்றுமதி அபிவிருத்தி சபை நடாத்தியது. – பதிவுசெய்யப்பட்ட 107 பங்கேற்பாளர்களுடன்- பாடநெறியின் ஒரு பாகமாக கள விஜயமொன்றும் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது.
- ''சர்வதேச வர்த்தகத்தின் இயக்க அம்சங்கள்'' பற்றிய இரண்டு பாடநெறிகள் (80 மற்றும் 81 வது பாடநெறிகள்) 86 பங்கேற்பாளர்களுடன் நடாத்தப்பட்டது.
- ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்கள் மற்றும் வர்த்தக திணைக்களத்திற்கு புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு ஏற்றுமதி செயன்முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தகம் பற்றிய இரண்டு செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.
- சீலோன் தேசிய கைத்தொழில் பேரவையின் மேண்டுகோளுக்கு இணங்க கிரியுள்ள கல்வி மாகாணத்தை சேர்ந்த 40 ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.

**ஏற்றுமதியாளர் பதிவு**

804 தற்காலிக பதிவு சான்றிதழ்களும் 106 நிரந்தர சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

ஏற்றுமதி சார்ந்த வெளியீடுகள்: மீளாள்வுக்கு உட்பட்ட காலத்தில், 11 ''எக்ஸ்போநிவுஸ்'' வெளியீடுகளும் 05 ''அபனயனபுவத்'' வெளியீடுகளும் வெளியிடப்பட்டதுடன் அவை சந்தா செலுத்துவோர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.. மீளாள்வுக்கு உட்பட்ட காலத்தில், ''கொள்கை சுருக்கச்செய்தி'' செய்தித் தொகுப்புகள் 06 ஏ.அ.ச விவகாரங்கள் மத்தியில் வெளியிடப்பட்டது.

ஏற்றுமதி செயலாற்றுகை குறிகாட்டிகள் – 2004-2014: ஏற்றுமதி செயலாற்றுகை குறிகாட்டிகள் என்பது இலங்கை ஏற்றுமதி துறை சார்ந்த விரிவான தரவுகள் உள்ளடக்கிய வெளியீடாகும். இது அச்சிடப்பட்ட மற்றும் இறுவட்டு வடிவில் வெளியிடப்படுகின்றதுடன் சம்பந்தப்பட்ட நிறுவகங்கள், வர்த்தக சம்மேலனம் மற்றும் பல்கலைக்கழகங்கள் போன்ற அமைப்புகள் மத்தியில் விநியோகிக்கப்படுகின்றது.

**ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள்**

- ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது சுவிஸ் தூதரகம் இலங்கை, வர்த்தக திணைக்களம் மற்றும் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் சுவிஸ்-ஸ்ரீ லங்கா வட்ட மேசை கலந்துரையாடலை ஏ.அ.ச கேட்போர் கூடத்தில் 2015 மே 25ஆம் திகதி ஒழுங்கமைக்கப்பட்டது.
- ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது வர்த்தக திணைக்களம் மற்றும் ைாத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சுடன் இணைந்து ''ஸ்ரீ லங்கா வர்த்தக கொள்ளை மற்றும் ஏற்றுமதி ஊக்குவிபபு மற்றும் அபிவிருத்தி'' பற்றிய செயலமர்வொன்றை 2015 பெப்ரவரி 25ஆம் திகதி ஏ.அ.ச கேட்போர் கூடத்தில் ஒழுங்கமைத்தது. இந்த செயலமர்வில் கிட்டத்தட்ட 250 ஏற்றுமதியாளர்கள் பங்குபற்றினர்.
- மர பாலேட்ட் சரக்கு மீதான புகை ஊட்டம்/தோற்று தடைகாப்பு பற்றிய விழிப்புணர்வு கூட்டம் 92 பங்கேற்பாளர்களுடன் 2015 மார்ச் 3ஆம் திகதி ஒழுங்கமைக்கப்பட்டது.

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச்சபை**

**31.12.2015 ல் உள்ள நிதி**

**நிலைமையின் அறிக்கை**

| | குறிப்பு | SLFRS 31.12.2015 | SLFRS 31.12.2014 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | ரூபா. சதம் | ரூபா. சதம் |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | | | |
| ஆதணி, இயந்திர, உபகரணங்கள் தேறிய | (9) | 79,849,346.39 | 64,144,109.91 |
| இணை முதலீடு - நிரற்படுத்தப்படாத | (10) | 942,012,158.00 | 888,590,808.00 |
| ஏனைய நடைமுறையல்லா நிதிச் சொத்துக்கள் | (11) | 40,548,150.00 | 40,548,150.00 |
| | | 1,062,409,654.39 | 993,283,067.91 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்புகள் | (12) | 1,843,501,.62 | 1,318,144.08 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | (13) | 143,919,667.87 | 148,466,803.11 |
| முற்பணம் மற்றும் முற்கொடுப்பனவுகள் | (14) | 38,192,036.96 | 51,334,602.58 |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | (15) | 85,038,612.68 | 37,597,978.87 |
| | | 268,993,819.13 | 238,717,528.64 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **1,331,403,473.52** | **1,232,000,596.55** |
| உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள் | | | |
| மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள் | | | |
| கிடைக்கப்பெற்ற மாணிங்கள் | (16) | 41,599,441.48 | 19,362,941.48 |
| செலவினத்திற்கு மேலதிகமான திரண்ட வருமானம் | | 1,092,316,061.15 | 1,026,271,483.80 |
| மொத்த உரிமையாண்மை | | 1,133,915,502.63 | 1,045,634,425.28 |
| **நடைமுறையல்லா பொறுப்புக்கள்** | | | |
| ஏற்பாடு மற்றும் ஏனைய பொறுப்புக்கள் | (17) | 29,184,142.24 | 26,525,183.86 |
| ஓய்வூதியக் கொடுப்பனவுக் கடப்பாடு | (18) | 93,193,267.00 | 84,374,275.25 |
| | | 122,377,409.24 | 110,899,459.11 |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | |
| ஏனைய கொடுக்க வேண்டியவை | (19) | 52,474,985.44 | 63,230,456.75 |
| வங்கி மேலதிகப் பற்று | (20) | 22,635,576.21 | 12,236,255.41 |
| | | 75,110,561.65 | 75,466,712.16 |
| **மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்** | | **1,331,403,473.52** | **1,232,000,596.55** |

நிதி அறிக்கையைத் தயாரித்தலும் மற்றும் காட்சிப்படுத்தலும் சபைப் பணிப்பாளர்களுக்குரிய பொறுப்பாகும். பணிப்பாளர் சபை சரியாக ஒப்பம் இடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| ………………………………….. | ……………………………… | ……………………... |
| இந்திரா மல்வத்த | திரு. ஏ.கே. செனிவிரத்ன | பி.கே. சுமித்ராராச்சி |
| தலைவரும் பிரதான நிறைவேற்று அதிகாரியும | சபை உறுப்பினர் | பணிப்பாளர் / நிதி |

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச்சபை**

**31.12.2015 ல் முடிவடைந்த வருடத்திற்குரிய வருமானக்கூற்று அறிக்கை**

| | குறிப்பு | SLFRS 31.12.2015 ரூபா. சதம் | SLFRS 31.12.2014 ரூபா. சதம் |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| வருமானம் | (3) | 560,293,096.48 | 607,956,169.40 |
| ஏனைய வருமானம் | (4) | 116,753,204.68 | 132,410,214.45 |
| மொத்த வருமானம் | | 677,046,301.16 | 740,366,383.85 |
| **செலவினம்** | | | |
| ஏற்றுமதி அபிவிருத்திச் செலவுகள் | (5) | (245,617,330.73) | (300,282,286.93) |
| நிர்வாகச் செலவுகள் | (6) | (359,936,254.12) | (332,116,077.42) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான செலவிலிருந்து பெறப்பட்ட வருமானம் | | 71,492,716.31 | 107,968,019.50 |
| நிதிக்கிரயம் | (7) | (1,348,677.45) | (2,216,154.81) |
| சாதாரண நடவடிக்கைகளுக்கான செலவிலிருந்து பெறப்பட்ட மிகை வருமானம் | | 70,144,038.86 | 105,751,864.69 |
| **ஏனைய வருமானக் கூற்று வருமானம்** | | | |
| - ஆதனம், இயந்திரம், மற்றும் உபகரணத்தின் மீள் மதிப்பீட்டு இலாபம் | (8) | - | (100,000.00) |
| - தீர்மானிக்கப்பட்ட அநுகூலத் திட்டத்தின் இலாபம் / நட்டம் | | - | - |
| - வெளிநாட்டு செயற்பாட்டின் மூலம் நிதி அறிக்கையை மொழிப் பெயர்க்கும் இலாபம்/ நட்டம் | | - | - |
| - விற்பனைக்குத் தயாரான நிதியியல் சொத்துக்களின் இலாபம் / நட்டம் | | - | - |
| இந்த வருடத்திற்குரிய ஏனைய வருமானக்கூற்று வருமானம் | | - | (100,000.00) |
| **இந்த வருடத்திற்குரிய மொத்த வருமானக்கூற்று வருமானம்** | | **70,144,038.86** | **105,651,864.69** |

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச்சபை**
**31.12.2015ல் முடிவடைந்த ஆண்டுக்கான**
**காசுப்பாய்ச்சல் அறிக்கை**

| | | 2015 | 2014 |
|---|---|---|---|
| | | ரூபா. சதம் | ரூபா. சதம் |
| **செயற்பாட்டு நடவடிக்கையிலான காசுப் பாய்ச்சல் (பாவனையில்)** | | | |
| சாதாரண நடவடிக்கைகளுக்கான செலவிலிருந்து பெறப்பட்ட மிகை வருமானம் | | 70,144,039 | 105,651,865 |
| **சீராக்கங்கள்** | | | |
| பெறுமானத் தேய்வு | | 13,347,223 | 10,283,639 |
| முதலீட்டு வருமானம் | | (109,503,735) | (123,308,069) |
| மறுமதிப்பீட்டில் இழப்பு | | - | 100,000 |
| ஆதன, இயந்திர உபகரணங்களின் விற்பனை (இலாபம்)/நட்டம் | | - | (1,967,736) |
| முன்னைய வருட சீராக்கங்கள் | | (4,099,462) | - |
| நிதிக் கிரயம் | | 364,397 | 359,624 |
| அரச மானியங்களின் குறைப்பு | | (3,323,500) | (1,343,079) |
| ஓய்வுகால உபகாரப் பணத்திற்கான ஒதுக்கீடு | | 19,909,697 | 13,496,607 |
| **தொழிற்பாட்டு மூலதன மாற்றத்திற்கு முன்னரான செயற்பாட்டு இலாபம் (நட்டம்)** | | **(13,161,340)** | **3,272,851** |
| இருப்புக்களின் அதிகரிப்பு / (குறைவு) | | (525,358) | 12,178 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகளின் அதிகரிப்பு / (குறைவு) | | 4,547,135 | 1,770,951 |
| முற்பணம் மற்றும் முற்பணக் கொடுப்பனவுகளின் (அதிகரிப்பு) / குறைவு | | 13,142,566 | (10,640,255) |
| ஏனைய பொறுப்புகள் மற்றும் ஒதுக்கங்கள் (அதிகரிப்பு) / குறைவு | | 2,658,958 | 4,435,775 |
| இதர கொடுப்பனவுகளின் (அதிகரிப்பு) / குறைவு | | (10,755,471) | (537,544) |
| **செயற்பாட்டின் மூலம் உருவாகிய பணம்** | | **(4,093,510)** | **(1,686,045)** |
| செலுத்திய நிதிக் கிரயம் | | (364,397) | (359,624) |
| செலுத்திய திட்டமிட்ட அனுகூலச் செலவு | | (11,090,706) | (9,077,408) |
| **செயற்பாட்டு நடவடிக்கையின் மூலம் தேறிய பணம்** | | **(15,548,612)** | **(11,123,076)** |
| **முதலீட்டு செயற்பாடுகளின் காசுப்பாய்ச்சல் கூற்று (பாவனையில்)** | | | |
| ஆதன, இயந்திர, உபகரணங்களின் உரிமை | | (3,492,460) | (6,808,384) |
| ஆதனம், இயந்திரம் மற்றும் உபகரணம் போன்றவற்றின் விற்பனை வருமானம | | - | 3,413,069 |
| கூட்டிணைப்பு பங்கு முதலீட்டு மூலம் பெறப்பட்ட வருமானம் | | 53,421,350 | 83,131,040 |
| கிடைக்கப்பெற்ற பங்கு இலாபம் | | 54,097,923 | 37,965,315 |
| கிடைக்கப்பெற்ற வட்டி | | 1,984,462 | 2,211,715 |
| **முதலீட்டு நடவடிக்கையின் மூலம் தேறிய காசுப்பாய்ச்சல் (பாவனையில்)** | | **106,011,274** | **119,912,754** |
| **நிதி நடவடிக்கையின் மூலம் தேறிய காசுப் பாய்ச்சல் (பாவனையில்)** | | | |
| பங்கு முதலீடு | | (53,421,350) | (83,131,040) |
| **நிதி நடவடிக்கையின் மூலம் தேறிய காசுப்பாய்ச்சல் (பாவனையில்)** | | **(53,421,350)** | **(83,131,040)** |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு / குறைவு | | 37,041,312 | 25,658,639 |
| வருட ஆரம்பத்தில் உள்ள காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | | 25,361,724 | (296,915) |
| **வருட இறுதியில் உள்ள காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்** | | **62,403,036** | **25,361,724** |
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் பகுப்பாய்வு** | | | |
| கையிலுள்ள காசு | 15 | 130,049 | 88,706 |
| வங்கியிலுள்ள காசு - சாதகமான | 15 | 84,908,564 | 37,509,272 |
| வங்கி மிகைப்பற்று | 20 | (22,635,576) | (12,236,255) |
| | | **62,403,036** | **25,361,724** |

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச்சபை**
**31.12.2015ல் முடிவடைந்த ஆண்டுக்கான**
**உரிமையாண்மை மாற்றங்களின் அறிக்கை**

| | | அரச மானியங்கள் | திரண்ட இலாபம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 01.01.2014ல் மீதி | | 20,706,020.21 | 920,619,619.11 | 941,325,639.32 |
| சாதாரண நடவடிக்கைகளுக்கான செலவிலிருந்து பெறப்பட்ட மிகை வருமானம் | | - | 105,651,864.69 | 105,651,864.69 |
| அரச மானியத்தின் சேர்க்கை | | (1,343,078.73) | - | (1,343,078.73) |
| 31.12.2014ல் மீதி | | **19,362,941.48** | **1,026,271,483.80** | **1,045,634,425.28** |
| சாதாரண நடவடிக்கைகளுக்கான செலவிலிருந்து பெறப்பட்ட மிகை வருமானம் | | - | 70,144,038.86 | 70,144,038.86 |
| அரச மானியத்தின் சேர்க்கை | | (3,323,500.00) | - | (3,323,500.00) |
| முன்னைய வருட சீராக்கங்கள் | **(22.2.3)** | - | (4,099,461.51) | (4,099,461.51) |
| **31.12.2015ல் மீதி** | | **16,039,441.48** | **1,092,316,061.15** | **1,108,355,502.63** |

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை**
**31.12.2015ல் முடிவடைந்த நிதி அறிக்கையின் குறிப்புகள்**

| | SLFRS 31.12.2015 ரூபா. சதம் | SLFRS 31.12.2014 ரூபா. சதம் |
|---|---|---|
| **(3) வருமானம்** | | |
| கிடைக்கப்பெற்ற மானியம் | 462,770,000.00 | 518,000,000.00 |
| ஏற்றுமதிச் சேவைகள் மூலம் பெற்ற வருமானம் | 84,001,943.59 | 68,596,668.00 |
| ஊர்முபுஆ 2013 | - | 9,120,000.00 |
| கிளைகளின் (பிரிவு) வருமானம் | 84,050.40 | 27,134.75 |
| இணைய (இன்டர்நெட்) வருமானம் | 343,894.00 | 367,859.00 |
| இணைய போர்டல் | 458,859.79 | 316,195.56 |
| எக்ஸ்போ - 2012ன் வருமானம் | 1,000,000.00 | 1,000,000.00 |
| கருத்தரங்குகள் மற்றும் பாடநெறிக் கட்டணம் | 3,773,280.00 | 2,770,242.00 |
| தோல் கண்காட்சி கூடம் மூலம் கிடைத்த வருமானம் 2014 | 6,539,247.70 | 6,543,145.09 |
| புத்தகங்கள் விற்பனை | 165,821.00 | 309,425.00 |
| ஏனைய வருமானம் | 1,156,000.00 | 905,500.00 |
| | **560,293,096.48** | **607,956,169.40** |

## (4) ஏனைய வருமானம்

| | | |
|---|---|---|
| வட்டி வருமானம் | 1,984,461.65 | 2,211,714.68 |
| இணைக் கம்பனி வருமானப் பங்கு | 53,421,350.00 | 83,131,040.00 |
| பங்கு இலாப வருமானம் | 54,097,923.05 | 37,965,314.57 |
| நிலையான சொத்தின் விற்பனையிலிருந்தான இலாபம் | - | 1,967,735.68 |
| ஏனைய சில்லரை வருமானம் | 438,496.35 | 1,045,364.07 |
| அரச தேய்மானம் | 3,323,500.00 | 1,343,078.73 |
| பெற்ற வட்டி வருமானம் (ஐகுசுளு) | 3,487,473.63 | 4,745,966.72 |
| பறிமாற்ற வித்தியாசங்கள் | - | - |
| | **116,753,204.68** | **132,410,214.45** |

## (5) ஏற்றுமதி அபிவிருத்திச் செலவுகள்

| | | |
|---|---|---|
| ஏற்றுமதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | 66,607,024.74 | 80,298,367.71 |
| ஈயு இலங்கை இயல்பு கருத்திட்டம் | - | 570,611.09 |
| ஏற்றுமதி சந்தைப்படுத்தலை மேம்படுத்தல் - கடல்கடந்த | 121,312,624.90 | 92,264,081.98 |
| CHOGM 2013 | - | 82,405,173.94 |
| எக்ஸ்போ மிலானோ 2015 | 13,331,528.67 | - |
| வர்த்தக தூதுக்குழுவின் பங்கேற்பு | 500.00 | 531,303.11 |
| உள்ளூர் வர்த்தகச் சந்தைகள் | 9,211,475.65 | 2,181,155.30 |
| கொள்கை மற்றும் திட்டமிடல் செலவுகள் | 3,692,527.17 | 977,162.38 |
| ஏற்றுமதி சந்தை மேம்படுத்தல் - உள்ளூர் | 3,751,492.77 | 9,424,470.21 |
| பிராந்திய அபிவிருத்திச் செலவுகள் | 13,278,983.73 | 19,026,572.10 |

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை**
**31.12.2015ல் முடிவடைந்த நிதி அறிக்கையின் குறிப்புகள**

| | SLFRS 31.12.2015 ரூபா. சதம் | SLFRS 31.12.2014 ரூபா. சதம் |
|---|---|---|
| வர்த்தக தகவல்கள் மற்றும் சேவைச் செலவுகள | 4,220,741.78 | 7,639,200.33 |
| வர்த்தக வலைச் செலவுகள் | 7,219,584.70 | 3,404,465.89 |
| இணைந்த விவசாய மாதிரிப் பண்ணைச் செயற்திட்டம் | 2,982,206.62 | 2,680.00 |
| இலங்கை கறுவா குறீயீடு வடிவமைபு | 8,640.00 | 1,557,042.89 |
| | **245,617,330.73** | **300,282,286.93** |

**(6) நிர்வாகச் செலவுகள்**

| | | |
|---|---|---|
| சம்பளம் மற்றும் கூலிகள் | 127,498,333.84 | 109,968,561.74 |
| மேலதிக நேரம் மற்றும் விடுமுறைக் கொடுப்பனவு | 7,404,712.84 | 8,328,658.36 |
| மிகை ஊதியம் (போனஸ்) | 2,778,337.50 | 2,687,512.50 |
| ஊழியர் சேமலாப நிதி | 16,708,117.65 | 12,958,600.38 |
| ஊழியர் நம்பிக்கை நிதி | 3,350,700.01 | 2,545,187.66 |
| ஓய்வூதியம் | 43,835.00 | 34,000.00 |
| பணிக்கொடை | 19,909,697.25 | 13,496,606.73 |
| உத்தியோகத்தர் நலன்புரி | 22,456,280.97 | 20,355,505.15 |
| ஆட்சேர்த்தல் கட்டணங்கள் | 1,122,920.59 | 262,569.43 |
| உத்தியோகத்தர் செலவு (ஐகுசுளு சீராக்கம்) | 3,487,473.63 | 4,745,966.72 |
| மின்சாரம் | 18,024,563.57 | 22,471,618.02 |
| நீர் | 802,563.06 | 789,544.24 |
| சட்ட மற்றும் வேறு தொழில்சார் கட்டணம் | 650,864.00 | 66,874.40 |
| விளம்பரம் | 203,172.00 | 489,776.00 |
| பாதுகாப்பு | 4,727,765.12 | 4,236,270.54 |
| கணக்காய்வுக் கட்டணம் | 600,000.00 | 1,039,239.00 |
| அச்சிடல் கட்டணம் | 393,974.78 | 956,654.80 |
| போக்குவரத்து மற்றும் பிரயாணக் கட்டணம் | 13,025,028.12 | 15,705,709.54 |
| விருந்தோம்பல் | 405,266.84 | 254,383.60 |
| ஏனைய பொதுச் செலவுகள் | 6,158,289.95 | 1,682,354.10 |
| சபை அங்கத்தவர்கள் கட்டணம். | 608,327.00 | 571,270.00 |
| அலுவலக உபகரணங்களின் பராமரிப்பு | 2,398,773.73 | 971,931.65 |
| வாடகை | 65,301,327.83 | 63,500,001.60 |
| எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கிள் | 4,781,361.74 | 8,397,404.96 |
| வாகனங்களின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு | 5,466,619.52 | 6,653,826.76 |
| தனியார் வாடகைக் கட்டணம் | 5,709,259.05 | 5,739,629.40 |
| தொடர்பாடல் மற்றும் சந்தாப்பணம் | 7,174,814.76 | 8,216,618.66 |
| பெறுமானத் தேய்வு | 13,347,222.77 | 10,283,639.34 |
| உள்ளூர் வியாபாரம் | 854,417.53 | 338,961.40 |
| கேள்வி மனுவை வழங்கல் | 3,425,668.03 | 3,912,601.53 |

## இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

## 31.12.2015ல் முடிவடைந்த நிதி அறிக்கையின் குறிப்புகள்

| | SLFRS<br>31.12.2015<br>ரூபா. சதம | SLFRS<br>31.12.2014<br>ரூபா. சதம |
|---|---|---|
| நாணயமாற்று நட்டம் | 1,116,565.44 | 408,458.96 |
| பரிமாற்ற நட்டம் | - | 46,140.25 |
| | **359,936,254.12** | **332,116,077.42** |

### (7) நிதிக் கிரயம்

| | | |
|---|---|---|
| வட்டிச் செலவுகள் | 364,397.02 | 359,623.59 |
| முத்திரைக் கட்டணம் | 73,772.50 | 971,611.00 |
| நிதிக் கட்டணம் | 910,507.93 | 884,920.22 |
| | **1,348,677.45** | **2,216,154.81** |

### (8) மோட்டார் வாகனங்களை மீள்மதிப்பீடு செய்தல்

31.12.2012ல் இலங்கை மோட்டார் வண்டிச் சங்கம் இச்சபைக்குச் சொந்தமான மோட்டார் வாகனங்களை மீள்மதிப்பீடு செய்தது. இந்தச்சபை ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை மோட்டார் வாகனங்களை மீள் மதிப்பீடு செய்ய எதிர்பார்க்கின்றது.

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை**

**31.12.2015ல் முடிவடைந்த நிதி அறிக்கையின் குறிப்புகள்**

## (9) ஆதன, இயந்திர மற்றும் உபகரணங்கள்

### (9.1) திரயம்

| சொத்துக்கள் | மீதி 01/01/2015 | மேலதிகம் | மீள் மதிப்பீடு | வைப்புக்கள் | மீதி 31/12/2015 |
|---|---|---|---|---|---|
| குடியிருப்புக்குரிய தொலைபேசி | 99,364.00 | - | - | - | 99,364.00 |
| மோட்டார் வாகனம் | 49,550,000.00 | 25,560,000.00 | - | - | 75,110,000.00 |
| குணனி | 31,941,213.02 | 1,308,681.00 | - | - | 33,249,894.02 |
| கணனி மென்பொருள் | 4,145,281.00 | 1,920,799.50 | - | - | 6,066,080.50 |
| கணனி உபகரணங்கள் | 980,467.32 | 25,880.00 | - | - | 1,006,347.32 |
| தொலைக்காட்சி உபகரணங்கள் | 4,730,855.01 | 66,490.00 | - | - | 4,797,345.01 |
| PABX உபகரணங்கள் | 65,549.00 | - | - | - | 65,549.00 |
| தொலைபேசி இணைப்பை ஏற்படுத்தல் | 1,495,390.14 | 11,770.00 | - | - | 1,507,160.14 |
| தளபாடம் மற்றும் பொருத்துதல்கள் | 14,775,057.29 | 24,675.00 | - | - | 14,799,732.29 |
| அலுவலக உபகரணங்கள். | 15,468,572.24 | 134,163.75 | - | - | 15,602,735.99 |
| | **123,251,749.02** | **29,052,459.25** | - | - | **152,304,208.27** |

### (9.2) பெறுமானத்தேய்வு

| | மீதி 1/1/2015 | வருடத்திற்கான கட்டணம் | விற்பனைக்குரிய பெறுமானத்தேய்வு | மீதி 31/12/2015 |
|---|---|---|---|---|
| குடியிருப்புக்குரிய தொலைபேசி | 68,367.42 | 7,121.64 | - | 75,489.06 |
| மோட்டார் வாகனம் | 11,349,999.99 | 7,698,500.00 | - | 19,048,499.99 |
| குணனி | 24,346,098.58 | 2,854,883.35 | - | 27,200,981.93 |
| கணனி மென்பொருள் | 1,978,284.77 | 733,304.30 | - | 2,711,589.07 |
| கணனி உபகரணங்கள் | 341,899.27 | 217,274.39 | - | 559,173.66 |
| தொலைக்காட்சி உபகரணங்கள் | 3,302,935.56 | 222,112.11 | - | 3,525,047.67 |
| PABX உபகரணங்கள் | 30,713.57 | 3,483.54 | - | 34,197.11 |
| தொலைபேசி இணைப்பை ஏற்படுத்தல் | 1,341,124.01 | 80,465.42 | - | 1,421,589.43 |
| தளபாடம் மற்றும் பொருத்துதல்கள் | 5,853,706.65 | 693,381.59 | - | 6,547,088.24 |
| அலுவலக உபகரணங்கள். | 10,494,509.29 | 836,696.43 | - | 11,331,205.72 |
| | **59,107,639.11** | **13,347,222.77** | **-** | **72,454,861.88** |

| *குறைக்கப்பட்ட பெறுமதி* | **2015** | **2014** |
|---|---|---|
| திரயம் | 152,304,208.27 | 123,251,749.02 |
| திரண்ட பெறுமானத் தேய்வு | (72,454,861.88) | (59,107,639.11) |
| குறைக்கப்பட்ட பெறுமதி | **79,849,346.39** | **64,144,109.91** |

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை**

**31.12.2015ல் முடிவடைந்த நிதி அறிக்கையின் குறிப்புகள்**

| | | SLFRS 31.12.2015 ரூபா சதம் | SLFRS 31.12.2014 ரூபா சதம் |
|---|---|---|---|
| **(10)** | **இணை முதலீடு நிரற்படுத்தப்படாத** | | |
| | இணைக்கம்பனிகளில் முதலீடு - னுரீடு | 942,012,158.00 | 888,590,808.00 |
| | | **942,012,158.00** | **888,590,808.00** |
| **(11)** | **ஏனைய நடைமுறையல்லா நிதிச் சொத்துக்கள்** | | |
| | மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்குகள் | 105,058,083.78 | 105,058,083.78 |
| | சாதாரண பங்குகள் | 58,312,483.62 | 58,312,483.62 |
| | (-) மதிப்பு சேத ஏற்பாடு | (122,822,417.40) | (122,822,417.40) |
| | | **40,548,150.00** | **40,548,150.00** |
| **(12)** | **இருப்புகள்** | | |
| | காகிதாதிகள் | 1,843,501.62 | 1,318,144.08 |
| | டயர் மற்றும் டியூப் | - | - |
| | | **1,843,501.62** | **1,318,144.08** |
| **(13)** | **வியாபார மற்றும் ஏனைய கிடைக்க வேண்டியவைகள்** | | |
| | ஏற்றுமதியாளருக்குரிய கடன் | 46,120,175.53 | 46,391,543.87 |
| | (-) கடன்களின் சேத ஏற்பாடு | (45,477,591.40) | (45,477,591.40) |
| | உத்தியோகத்தர் கடன்கள் | 41,985,995.31 | 43,867,269.13 |
| | குறை : ஒத்திவைக்கப்பட்ட உத்தியோகத்தர் செலவு | (14,316,119.84) | (14,704,943.13) |
| | வெட் (ஏயவ) பெறத்தக்க | 104,676,878.80 | 104,676,878.80 |
| | ஏனைய கடன்பட்டோர் | 10,930,329.47 | 13,713,645.84 |
| | | **143,919,667.87** | **148,466,803.11** |
| **(14)** | **முற்பணம் மற்றும் முற்கொடுப்பனவுகள்** | | |
| | முற்கொடுப்பனவுகள் | 15,599,232.10 | 18,360,928.24 |
| | முற்பணங்கள் | 5,719,704.56 | 15,981,790.75 |
| | வங்கி உத்தரவாதம் | 300,000.00 | 300,000.00 |
| | சேவைக்கான வைப்புகள் | 1,062,550.30 | 1,002,550.30 |

| | SLFRS 31.12.2015 ரூபா சதம | SLFRS 31.12.2014 ரூபா சதம |
|---|---|---|
| மீளளிக்கக்கூடிய பாதுகாப்பு வைப்புகள் | 969,390.16 | 969,390.16 |
| இரத்தாக்கப்பட்ட காசோலைகள் | 225,040.00 | 15,000.00 |
| முன்செலுத்திய உத்தியோகத்தர் செலவு | 14,316,119.84 | 14,704,943.13 |
| | **38,192,036.96** | **51,334,602.58** |

**(15) பணம் மற்றும் பண**

| | | |
|---|---|---|
| இலங்கை வங்கி - காசாளரிடம் வைப்பு | 2,500.00 | 2,500.00 |
| இலங்கை வங்கி - லேக் வியூ | 74,513,941.58 | 26,733,368.90 |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 4,463,266.71 | 6,067,851.26 |
| இலங்கை வங்கி - கூட்டுறவுக் கிளை | 5,904,484.72 | 4,683,705.38 |
| சம்பத் வங்கி - கண்டி | 4,728.76 | 4,471.75 |
| சம்பத் வங்கி - காலி | 6,886.49 | 6,625.89 |
| இலங்கை வங்கி - அம்பாறை | 3,987.61 | 3,392.04 |
| இலங்கை வங்கி - ஹம்பாந்தோட்டை | 1,903.61 | 1,780.64 |
| இலங்கை வங்கி - பதுளை | 4,385.80 | 3,789.14 |
| சம்பத் வங்கி - குருநாகல் | 919.78 | 413.71 |
| கையிலுள்ள காசு | 1,558.68 | 1,373.76 |
| கையிலுள்ள காசு | 130,048.94 | 88,706.40 |
| | **85,038,612.68** | **37,597,978.87** |

**(16) கிடைக்கப்பெற்ற மானியங்கள்**

| | | |
|---|---|---|
| அரசாங்கப் பங்களிப்பு | 7,904,002.00 | 7,904,002.00 |
| அரசாங்கப் பங்களிப்பு - மோட்டார் வாகனம் | 38,560,000.00 | 13,000,000.00 |
| ருனேீ பங்களிப்பு | 2,110,282.00 | 2,110,282.00 |
| ஐவுஊ பங்களிப்பு | 12,716.35 | 12,716.35 |
| ஏற்றுமதி ஊக்குவிப்புச் செயலகம் | 202,677.32 | 202,677.32 |
| (-) அரச மானியங்களின் குறைப்பு | (7,190,236.19) | (3,866,736.19) |
| | **41,599,441.48** | **19,362,941.48** |

**(17) ஏற்பாடு மற்றும் ஏனைய பொறுப்புக்கள்**

| | | |
|---|---|---|
| கடன்திடட பங்களிப்பு | 7,888,532.97 | 7,567,706.09 |
| UPEPV | 2,108,251.77 | 2,108,251.77 |
| எக்ஸ்போ பிரிவு | 24,678,355.00 | 19,055,549.00 |

## இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை
## 31.12.2015ல் முடிவடைந்த நிதி அறிக்கையின் குறிப்புகள்

| | SLFRS 31.12.2015 | SLFRS 31.12.2014 |
|---|---|---|
| | ரூபா சதம | ரூபா சதம |
| UPEPV - கட்டுப்பாட்டுக் கணக்குகள் | (10,403,683.00) | (10,403,683.00) |
| மீளளிப்பு வைப்புகள் | 4,912,685.50 | 8,197,360.00 |
| | **29,184,142.24** | **26,525,183.86** |

### (18) ஓய்வூதியக் கொடுப்பனவுக் கடப்பாடு

| | | |
|---|---|---|
| மீதி மு/வ | 84,374,275.25 | 79,955,076.27 |
| உரிய வருடத்திற்கான ஏற்பாடு | 19,909,697.25 | 13,496,606.73 |
| உரிய வருடத்தினுள் செலுத்தப்பட்டவை | (11,090,705.50) | (9,077,407.75) |
| மீதி மு/செ | **93,193,267.00** | **84,374,275.25** |

### (19) வர்த்தகக் கொடுப்பனவுகள்

| | | |
|---|---|---|
| முத்திரைக்கட்டணக் கொடுப்பனவு | 16,175.00 | 15,775.00 |
| கோரப்படாத சம்பளம் | 152,054.87 | 19,922.30 |
| கோரப்படாத இதர கொடுப்பனவுகள் | 21,717.86 | - |
| ஊழியர் சேமலாபநிதிக் கொடுப்பனவு | 2,780,399.73 | 1,882,605.64 |
| ஊழியர் நம்பிக்கை நிதிக் கொடுப்பனவு | 333,648,.12 | 225,912.82 |
| ஓய்வூதிய கொடுப்பனவு | (165.00) | 397.50 |
| ஊழியர்களின் இறுதிக் கொடுப்பனவு | 61,644.46 | 61,644.46 |
| கணக்காய்வுக் கட்டணக் கொடுப்பனவு | 1,973,292.00 | 3,269,004.00 |
| திருப்பிச் செலுத்த வேண்டிய பாதுகாப்பு வைப்பு – காசாளர் | 2,500.00 | 2,500.00 |
| காப்பீட்டு தொகை | - | 12,357.14 |
| விலை மனு கோரலுக்கான திருப்பிச் செலுத்த வேண்டிய பாதுகாப்பு வைப்பு | 6,000.00 | 76,000.00 |
| மாற்றப்படாத காசோலைகள் | 317,233.95 | 317,233.95 |
| ஏனைய அட்டுறு செலவுகள் | 46,810,484.45 | 57,347,103.94 |
| விவசாய வலய கொடுப்பனவிற்கான ஏற்பாடு | - | - |
| | **52,474,985.44** | **63,230,456.75** |

### (20) வங்கி மேலதிகப் பற்று

| | | |
|---|---|---|
| இலங்கை வங்கி - லேக் வியூ | 22,635,576.21 | 12,235,606.53 |
| இலங்கை வங்கி - காலி | - | 648.88 |
| | **22,635,576.21** | **12,236,255.41** |

**31.12.2015ல் முடிவடைந்த ஆண்டுக்கான**
**நிதி அறிக்கைக் குறிப்புகள்**

**(21)** இலங்கை கணக்கீட்டு நியமம் 39ன் தேவைப்பாட்டிற்கிணங்க சேத இழப்பிற்காக உரிமைப் பங்குகள் பரீட்சிக்கப்பட்டன. இதற்கிணங்க 1.1.2011ல் ரூபா 31,698,150 தொகை செய்த இழப்பு ஏற்பாட்டுத் தொகையாகப் பதிவழிக்கப்பட்டது.

**(22) (22.1)** சுங்கத் திணைக்கள பிரதம சேகரிப்பாளரினால் திறைசேரியிலிருந்து வசூலிக்க வேண்டிய தொகையானது இலங்கை கணக்கீட்டு நியமம் 39ன் தேவைப்பாட்டிற்கிணங்க சேத இழப்பிற்காகப் பரீட்சிக்கப்பட்டது. இதற்கமையவாக 1.1.2011ல் சேத இழப்பிற்கான ஏற்பாட்டுத் தொகையான ரூபா 468,742,448.83 சிபாரிசு செய்யப்பட்டது.

**(22.2)** **ஊழியர் கடன்**

இலங்கை கணக்கீட்டு நியமம் 39 ற்கிணங்க ஏதாவது சேத இழப்பை அமுலில் உள்ள வட்டி வீதத்திலிருந்து கழித்து, ஊழியர் கடன் சிபாரிசு செய்யப்படுகிறது. ஊழியர் கடனுக்கு இணங்க 1.1.2011ல் வெளிநிற்கும் தொகையானது தேய்வுக் கிரயத்திற்கு அமைய அளவிடப்பட்டது. இதற்கிணங்க ஊழியர்களுக்கான முற்பணச் செலவும் ஐகுசுளு சீராக்கக் கணக்குத் தொகைகளுமாக ரூபா 16,060,711.67 க்கு அதிகாரம் அளிக்கப்பட்ட ஏட்டுப் பெறுமதிக்கேற்ப உருவாக்கப்பட்டது.

***நிதிக்கூற்றில் காட்டப்பட்டுள்ள மீதிகள் முறையே பின்வருமாறு,***

**(22.2.1)** ஊழியர் கடன் தொகையிலிருந்து IFRS சீராக்கக் கணக்கு மீதி கழிக்கப்பட்டது. இதற்கமைவாக ஐந்தொகையில் ஊழியர் கடன் நியாயமான பெறுமதியைத் தற்போது காட்டுகிறது.

| | |
|---|---|
| ஊழியர் கடன் | 41,985,995.31 |
| IFRS சீராக்கங்கள் | (14,316,119.84) |
| | 27,669,875.47 |

**(22.2.2)** ஊழியர் முற்பணக் கிரயமானது நடைமுறைச் சொத்துக்களின் கீழ் சீராக்கமாகக் காட்டப்படுகின்றது.

| | |
|---|---|
| முற்பண ஊழியச் செலவு | 14,316,119.84 |

**(22.2.3)** **முன்னர் ஆண்டொன்றுக்கு கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கைக்கு இணங்கிய கண்டி மாகாண அலுவலக கட்டடத்திற்கு ரூபா 4,099,461.51 வீதத்திற்கான வாடகை செலவு.**

**(23)** எக்ஸ்போ அலகுக்கு வேண்டிய இருப்பு LKAS 39 இன் பிரகாரம் மெதுவாக நிலைமாறக்கூடிய செலவில் அளவிடப்படுகின்து. இதை மேலே சரிசெய்தல் தாக்கம் குறிக்கின்றது.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல. ஜீசீஎம்2/எப்/ஈடீபீ/1/15/63
My No.

මබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி 2017 பெப்ரவரி 21
Date

தலைவர்,
இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விரிவான வருமானக் கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 16 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை சபையின் தலைவருக்குக் காலக் கிரமத்தில் வழங்கப்படும்.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக் கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர, நிதிசார் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01

மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டினதும் மூலதனச் சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கென முறையே ரூபா 3,492,459 மற்றும் ரூபா 8,779,054 என அரசாங்க மானியம் பெறப்பட்டிருந்ததுடன், அவற்றை மூலதன மானியமாகக் கணக்கிலிடுவதற்குப் பதிலாக வருமானத்தில் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16

(i) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் பிரகாரம் நடைமுறை அல்லாத சொத்துக்களின் பயனுள்ள பாவனைக் காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால், ரூபா 467,705 கிரயமுடைய சொத்துக்கள் முற்றாகத் தேய்மானத்திற்குள்ளாகி இருந்தபோதும், தொடர்ந்தும்

பயன்படுத்தப்பட்டவாறிருந்தன. அதற்கமைவான மதிப்பிடப்பட்ட வழுவானது இலங்கை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீளாய்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) ஏனைய உபகரணங்களது தேய்மான விகிதம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19

ஊழியர்களது நலனுக்கான கடப்பாடு கணிப்பிடப்படுகையில் செயற்திட்ட அலகுக் கடன் முறைமையைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 24

சபையின் தலைவர் சபையினது இணைந்த கம்பனியில் பணிப்பாளர் சபை அங்கத்தவராக இருப்பதுடன், சபையானது கம்பனியின் செயற்பாட்டு மற்றும் நிதிக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் சம்பந்தமான தீர்மானங்கள் தொடர்பாகத் தனது பங்களிப்பின் அளவு மற்றும் சபை அக்கம்பனிக்கு வழங்கும் கட்டிட வாடகை, கேட்போர்கூடக் கட்டணம், நீர், சுத்திகரிப்பு மற்றும் மின்சாரச் செலவினம் தொடர்பான தகவல்களைக் குறிப்பின் வாயிலாக வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 38

சபையின் இணையதளத்தை அபிவிருத்தி செய்வதற்குச் செலவிடப்பட்ட ரூபா 5,128,000 போலிச் சொத்துக்களாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 39

(i) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் நிலுவையாக இருந்த ஏற்றுமதிக் கடன் மீதி ரூபா 46,120,175 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 45,477,591 தொடர்பாக இழப்புண்டாக்கும் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஏற்றுமதிக் கடனை அறவிடுவதற்கான முன்னேற்றம் கருத்திற் கொள்ளப்படாது 2012 முதல் 2015 வரை சம அளவில் இழப்பிற்கான நிதியேற்பாடு

மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் காரணமாக, இழப்பிற்குள்ளான கம்பனிகளிலிருந்து அறவிடப்பட்டிருந்த ரூபா 379,868 தொடர்புடைய கணக்குகளில் சீராக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 163,370,566 பெறுமதியுடைய நிதிச் சாதனப்பத்திரம் நடைமுறை அல்லாத சொத்தாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(iii) 4 கம்பனிகளில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 25,750,000 பெறுமதியான பங்குகள் மூலம் கடந்த 07 ஆண்டு காலப்பகுதியின்போது பங்கிலாபம் பெறப்படாததுடன், அதன்பொருட்டு இழப்பிற்கான நிதியேற்பாடு செய்யப்பட்டிருக்கவுமில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு முடிவில் கடன்பட்டோர் கணக்கில் ரூபா 387,000 அசாதாரண செலவு மீதியும் கடன்கொடுத்தோர் கணக்கில் ரூபா 10,528,683 அசாதாரண வரவு மீதியும் இருந்தன. அவற்றை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டின்போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,920,799 பெறுமதியான கணனி மென்பாகங்கள், ரூபா 22,555 பெறுமதியுடைய கணனி உபகரணங்கள் மற்றும் ரூபா 8,750 பெறுமதியான தொலைபேசிப் பொருத்திகளுக்குரிய பெறுமானத்தேய்வு சீராக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மூலதனச் சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கெனப் பெறப்பட்ட அரச மானியம், சொத்தினது பயன்படு காலத்திற்கேற்ப முறையான அடிப்படையில் இலாப, நட்டமாக இனங்காணப்பட வேண்டியதுடன், அதற்கமைய, மீளாய்வாண்டின்போது காலக் கழிவாக ரூபா 13,347,223 கணக்கிலிடப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 3,323,500 மாத்திரம் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஈ) ஏற்றுமதியாளருக்குத் திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 3,181,941 வருமானமாகக் கணக்கிலிடப்பட்டமையால் அதேயளவு தொகையால்

மீளாய்வாண்டினது நடைமுறைப் பொறுப்பு குறைவாகவும் வருமானம் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தது.

(உ) ஏற்றுமதி உற்பத்திக் கிராமங்களை நிறுவுவதற்காக 2002 திசெம்பர் 24 ஆந் திகதியளவில் 06 சந்தர்ப்பங்களில் ஏற்றுமதி உற்பத்திக் கிராமங்களுக்குச் சபை வழங்கிய கடனுக்குரிய வட்டியாகிய ரூபா 2,997,619 கணக்கிலிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன் நிதிய மீதியானது பட்டோலையின் பிரகாரம் ரூபா 7,716,549 ஆகும். எவ்வாறாயினும், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அம் மீதி ரூபா 7,888,533 ஆகும். இதனால் ஏற்பட்ட விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள் ரூபா 171,984 ஆகும்.

**2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை**

கீழே குறிப்பிடப்பட்ட கணக்கீட்டு விடயங்களுக்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்கீட்டு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | சேர்ந்து நின்ற செலவினம் | 12,821,283 | பட்டோலை மற்றும் காலப்பகுப்பாய்வு |
| (ஆ) | திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புகள் | 8,197,360 | |
| (இ) | திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டச் செலவினம் | 4,728,200 | கொடுப்பனவு உறுதிச் சான்றுகளும் செயற்திட்டச் செலவின விபரமும் |

## 2.3 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஏற்றுமதித் தன்மையிலான மரக்கறி வகைகளைத் தொடர்ச்சியாக உற்பத்தி செய்யும் நோக்குடன் ஊவா பரணகம கிராமத்தை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டத்தின் பொருட்டு கிராமிய பொருளாதார புனர்வாழ்வு நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட கடன் தொகை தொடர்பாக மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொடுப்பனவு செய்யப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 5,000,000 ஆகும்.

(ஆ) சேவையை விட்டு நீங்கிய 2 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 71,254 மற்றும் கடன்பட்டோரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 51,235 என்பனவற்றை மீளாய்வாண்டு திசெம்பர் 31 வரை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 மார்ச் 27 அன்று போலந்தில் நடைபெற்ற வியாபாரக் கூட்டத்தில் கலந்துகொண்ட சபை உத்தியோகத்தர்களது செலவிற்காக வெளிவிவகார அமைச்சிற்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட பணத்தில் ரூபா 127,465 தொகையானது 2015 திசெம்பர் 31 வரை தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 போதியளவு அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் நிறைவேற்றுதரப் பணிப்பாளர் பதவியானது 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை அதிகாரச்சட்டத்தின் 23(I) ஆம் பிரிவின் பிரகாரம் சபை நடவடிக்கைகளை இலகுவாக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட நியமனமாகும் என நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதும், அதிகாரச்சட்டத்தில் அப்பிரிவின் கீழ் உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. குறித்த உத்தியோகத்தருக்கு நியமனத்தை வழங்கியதால் 2010 முதல் 2015 வரை சம்பளமும் படியுமாக ரூபா 4,076,773 தொகையும் கடமை மற்றும் தனிப்பட்ட பயணங்களுக்கு என வாகன வாடகையாக ரூபா 6,270,670 மற்றும் வெளிநாட்டுப் பயணங்களுக்குப் படியாகவும் பயணக் கட்டணமாகவும் ரூபா 2,122,770 என மொத்தம் ரூபா 12,470,213 முறையான அதிகாரமின்றிக்

கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும், 135 ஆம் நிதிப் பிரமாணத்தின்படி சபையின் நிதிக்கட்டுப்பாட்டிற்கான பணி ஒப்படைக்கப்படாதிருந்தும், காசோலைகளில் கையெழுத்திடுவதும் நடைபெற்றிருந்தது.

(ஆ) 2012 ஜுன் 08 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுவின் கட்டளையின் அடிப்படையில் திறைசேரியின் ஆலோசனைக்கு ஏற்ப 2011 ஜுன் 03 முதல் அமுலுக்கு வருமாறு மாதாந்தம் ரூபா 60,000 வாடகை செலுத்தப்படும் அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயினும், அதற்கு முரணாக, சபையானது அத்தினத்திலிருந்து 2015 திசெம்பர் 31 வரை வாகனங்களை வாடகைக்குப் பெற்று ரூபா 11,703,560 கூடுதலாகச் செலுத்தியிருந்தது.

(இ) சமர் பென்சி புட் வர்த்தகக் கண்காட்சி நடைபெற்ற காலப்பகுதியின்போது அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் உள்ளடங்கியிராத கண்காட்சி ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்காக வெளிவிவகார அமைச்சிற்குச் சபை ரூபா 76,999 வழங்கியிருந்த போதும், அதற்கான பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

**2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரச்சட்டம் | |
| (i) 2(1) ஆம் பிரிவு | 1992 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான 23 ஆண்டு காலப்பகுதியின்போது ஏற்றுமதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தையும் கொள்கைகளையும் அமுலாக்குவதற்காக தேசிய அபிவிருத்தி மன்றம் கூடியிருக்கவில்லை. |

(ii) 13(1), (2) ஆம் பிரிவுகள்

ஏற்றுமதி அபிவிருத்தி நிதியம் எனும் பெயரில் நிதியம் ஒன்று நிறுவப்பட வேண்டியதுடன், சபையின் அதிகாரங்களும் பணிகளும் அமுலாக்கப்படுகையிலும் நிறைவேற்றப்படுகையிலும் சபைக்கு ஏற்படும் செலவினம் தீர்த்து வைக்கப்படுவதற்கான சகல பணமும் சபையின் நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். எனினும், சபையானது அப்பிரிவின்படி ஏற்றுமதி அபிவிருத்தி நிதியத்தை நிறுவுவதற்கு 2016 திசெம்பர் 27 ஆந் திகதியளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டத்தின் 47 மற்றும் 1980 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 44 ஆம் பிரிவு என்பன

ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்பைக் கணிப்பிடும்போது விசேட படிகள், தொழில்சார் படிகள், இடைக்காலப் படிகள் மற்றும் அங்கீகரிக்கப்படாத விசேட வாழ்க்கைச் செலவுப் படிகள் என்பன உள்ளடக்கப்படக்கூடாது. எனினும், அதற்கு முரணாகக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டமையால் கணக்காய்வுக்குள்ளான 2012 முதல் 2015 வரையான காலப்பகுதியின் போது சபை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ரூபா 5,508,199 மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு ரூபா 659,375 எனக் கூடுதலாகப் பங்களிப்புச் செய்திருந்தது.

(இ) 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு

பணிக்கொடைக்கான நிதியேற்பாட்டின் போது விசேட படிகள், தொழில்சார்

| | | |
|---|---|---|
| | அதிகாரச்சட்டத்தின் 6(2)(அ) பிரிவு | படிகள், இடைக்காலப் படிகள் மற்றும் அங்கீகரிக்கப்படாத விசேட வாழ்க்கைச் செலவினப் படிகள் உள்ளடக்கப்படக் கூடாது. எனினும், அதற்கு முரணாக கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டமையால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பணிக்கொடைக்காக ரூபா 19,298,351 கூடுதலாக நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | |
| | (i) VIII ஆம் அத்தியாயத்தின் 4.1 மற்றும் 10.1 ஆம் பிரிவுகள் மற்றும் 2013 ஒக்டோபர் 07 ஆந் திகதிய 21/2013 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 2 ஆம் பிரிவு | • விடுமுறை நாளில் பணியாற்றும் நிறைவேற்றுதர உத்தியோகத்தர் ஒருவர் ஒரு நாளில் 8 மணித்தியாலங்கள் பணியாற்ற வேண்டும். எனினும் 8 மணித்தியாலங்களுக்குக் குறைவாகப் பணியாற்றிய சந்தர்ப்பங்கள் மற்றும் வார நாட்களில் கடமை நேரத்தின் பின்னர் வேலை செய்த நேரத்தை ஒன்று சேர்த்து நாட்களாக அவற்றைக் கணித்து ரூபா 229,932 சம்பளமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.<br><br>• அமைச்சினது செயலாளரின் அங்கீகாரத்தைப் பெறாது மாதம் ஒன்றிற்கு 2 நாட்களுக்கு அதிகமாகப் பணியாற்றிய 24 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 119,463 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ii) | VIII ஆம் அத்தியாயத்தின் 7 ஆம் பிரிவு | மாதாந்தம் 20 மணித்தியாலங்களுக்குக் கூடுதலாக மேலதிக நேர வேலைக்கான அங்கீகாரம் அமைச்சினது செயலாளரிடமிருந்து பெறப்பட வேண்டுமாயினும், அவ்வாறாக அங்கீகாரம் பெறப்படாது 48 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 98,763 மேலதிக நேர வேலைக் கொடுப்பனவாக வழங்கப்பட்டிருந்தது. |
| (iii) | XIV அத்தியாயத்தின் 04 ஆம் பிரிவு | உத்தியோகத்தர் ஒருவர் தனது வழமையான பணியகத்திலிருந்து கடமைக்காக வெளியேறும் காலத்தின் போது உத்தியோகத்தரது உணவு மற்றும் தங்குமிடம் தொடர்பாக இணைந்த படி வழங்கப்பட வேண்டுமாயினும், அவ்வாறு கழிந்த காலத்தை நாட்களாகக் கணித்து உத்தியோகத்தரது மாதாந்தச் சம்பளத்தில் 1/20 பங்காகக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு 12 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 36,979 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (iv) | XV அத்தியாயத்தின் 11.1 ஆம் பிரிவு | சகல விமானப் பயணங்களுக்கும் சிக்கன வகுப்பு பயன்படுத்தப்பட வேண்டுமாயினும், அதற்கு முரணாக 3 சபை உத்தியோகத்தர்களுக்கு வர்த்தக வகுப்புக்கான வானூர்திச் சீட்டுக்களைப் பெறுவதற்கு 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் ரூபா 2,105,300 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

(உ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை
-----------------------------------------

| | | |
|---|---|---|
| (i) | 2007 செப்தம்பர் 11 ஆந் திகதிய 21/2017 ஆம் இலக்கச் சுற்றறிக்கையும் தாபன விதிக் கோவையின் XV அத்தியாயத்தினது 10.1 மற்றும் 10.1.1 ஆம் பிரிவுகளும் | எக்ஸ்போ மிலானோ வர்த்தகக் கண்காட்சியில் பங்குபற்றிய இரண்டு உத்தியோகத்தர்களுக்கு இலங்கையிலிருந்து செல்வதற்கு முன்னர் பெறப்பட்ட பிரதம மந்திரியின் அங்கீகாரத்தினை விஞ்சி நாட்டிலிருந்து வெளியே இருந்த காலப் பகுதிக்கு ரூபா 605,803 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) | 2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய 13/2008 (IV) ஆம் இலக்கச் சுற்றறிக்கை | வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு மாதாந்த எரிபொருள் படியை வழங்கும்போது பதவிப் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட அதி கூடிய எல்லைக்கு அதிகமாக எரிபொருள் படி வழங்கப்பட்டிருந்தது. 2014 சனவரி 01 முதல் 2015 ஜுன் 01 வரையான காலப்பகுதியின் பொருட்டு நடாத்தப்பட்ட தெரிவுப் பரிசோதனைகளின் போது குறித்த எல்லையை மீறி ரூபா 213,302 அதிகமாகச் எரிபொருள் படியாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

(ஊ) திறைசேரிச் சுற்றறிக்கை

| | |
|---|---|
| 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்கச் சுற்றிக்கை | நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்படவில்லை. |

(எ) அரசாங்க நிதிச் சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| (i) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய JAI/2002/02 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | கணனிகள் மற்றும் கணனித் துணைப்பாகங்களின் பொருட்டு வேறாக ஒரு சொத்துப் பதிவேடு பேணப்பட வேண்டுமாயினும், ரூபா 33,066,961 பெறுமதியான கணனிகள் மற்றும் துணைப் பாகங்களின் பொருட்டு |

| | | |
|---|---|---|
| | | அவ்வாறாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 2014 ஒக்டோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | ஒவ்வொரு நிதியாண்டிலும் திசெம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் அவ்வாண்டிற்கான மெய்மையாய்வுச் சபை நியமனம் பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன், அடுத்து வரும் ஆண்டின் பெப்ரவரி 26 ஆந் திகதியளவில் பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகளை நிறைவு செய்து அவ்வறிக்கையைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டும். எனினும், 2016 ஆகஸ்ட் 04 ஆந் திகதியளவிலும் 2015 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| | 2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 5.2.5 ஆம் பந்தி | அடுத்துவரும் ஆண்டின் பாதீட்டிற்கு, குறித்த ஆண்டு தொடங்குவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். எனினும், 2015 ஆம் ஆண்டிற்கான பாதீடு 2015 மார்ச் 12 ஆந் திகதியளவிலும் திறைசேரி அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்படவில்லை. |
| (ஐ) | 2000 சனவரி 11 ஆந் திகதிய பீஎப்/பீஈ 5 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை மற்றும் 1994 ஜூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கை என்பன | (i) அமைச்சரவை, பொது நிர்வாக அமைச்சு அல்லது திறைசேரியால் குறிப்பாக அங்கீகரிக்கப்படும் நலன் மாத்திரமே, தமது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் தமது ஊழியர்களுக்குக் கொடுப்பனவு |

செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், 1992 ஆம் ஆண்டு முதல் சம்பளத்துடன் வழங்கப்பட்ட தொழில்சார் படி மற்றும் விசேட வாழ்க்கைச் செலவுப் படி என்பவற்றிற்குத் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. கடந்த 3 ஆண்டுகளிலும் மீளாய்வாண்டிலும் அவ்வாறு வழங்கப்பட்ட தொழில்சார் படி ரூபா 2,182,894 ஆகும். விசேட வாழ்க்கைச் செலவுப்படி ரூபா 18,284,887 ஆகும்.

(ii) ஊழியர்களுக்குப் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கும் போக்குவரத்தும் படியை வழங்குவதற்குப் திறைசேரியின் அங்கீகாரத்தைச் சபை பெற்றிருக்கவில்லை. சபை வழங்கும் போக்குவரத்துச் சேவையைப் பயன்படுத்தாத பிரதிப் பணிப்பாளர்களுக்கு மாதாந்தம் ரூபா 5,500 போக்குவரத்துப் படியாகவும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு நாளாந்தம் ரூபா 172 வீதப்படியும் வழங்கப்பட்டிருந்தன. அதற்கமைய, மீளாய்வாண்டின் போது ஊழியர்களுக்குப் போக்குவரத்துச் சேவை வழங்குவதற்காக செலவிடப்பட்ட தொகை ரூபா 12,458,798 ஆகும்.

3. நிதிசார் மீளாய்வு

3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளது நிதி விளைவுகள் ரூபா 70,144,039 மிகையாகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 105,751,865 ஆகும். இதனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 35,607,826 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. அரச மானியத்திலும் ஏனைய வருமானத்திலும் ஏற்பட்ட குறைவு நிதிசார் விளைவு வீழ்ச்சிக்கான பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் பங்களிப்பை மதிப்பாய்வு செய்த போது, 2011 முதல் 2013 வரையான காலப்பகுதியின்போது பங்களிப்பு 2.6 முதல் 85 சதவீதம் வரை அதிகரித்திருந்தபோதும், மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் அப் பங்களிப்பு முறையே 0.93 சதவீத்தாலும் 0.29 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் வருடாந்த அறிக்கையின் பிரகாரம் நோக்கங்கள் பின்வருவன ஆகும்.

(i) மஹிந்த சிந்தனை – தொலைநோக்கை எதிர்பார்த்த பொருளாதார அபிவிருத்தி இலக்கை எய்தற்பொருட்டு இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தை 2020 ஆம் ஆண்டில் 20 அமெரிக்க டொலர் பில்லியன் வரை உயர்த்துதல்.

(ii) ஐரோப்பிய சங்கம் மற்றும் அமெரிக்க ஐக்கிய குடியரசுச் சந்தைகளுக்கு இலங்கையின் ஏற்றுமதிகளை நிலையாக வைத்தவாறு, ஏனைய வெளிநாட்டுச் சந்தைகளுக்கு வழங்கும் ஏற்றுமதிகளை ஒட்டுமொத்த ஏற்றுமதிச் சம்பாத்தியத்தில் 50 சதவீதத்திற்கும் அதிகளவான மட்டத்திற்கு உயர்த்துதல்.

(iii) இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் ஏறக்குறைய 80 சதவீதப் பங்களிப்பை வழங்கும் இனங்காணப்பட்ட முக்கிய ஏழு (07) பண்டங்கள் தொடர்பாக விசேட கவனஞ் செலுத்தி, அவற்றினது ஏற்றுமதி வருமானத்தைக் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தல்.

(iv) ஒன்றிணைந்த விற்பனை ஊடக நிகழ்ச்சித்திட்டத்தினூடாக இலங்கையின் ஏற்றுமதிப் பண்டங்கள் மற்றும் சேவை தொடர்பான செழிப்பான பிரதிமையைச் சர்வதேசத்தில் ஏற்படுத்தல்.

(v) ஏற்றுமதி வியாபாரத்தின் நலனானது அத்துறையில் உள்ள சகல தரப்பினருக்கும் தீவின் சகல மாகாணத்திற்கும் பரந்து செல்வதை ஏற்பாடு செய்தல்.

(vi) ஊழியர்களது செயற்திறன் கடமை உணர்வும் தொடர்பாக விசேட கவனஞ் செலுத்தியவாறு நிறுவனத்தின் அடிப்படை பெறுமதியின் அடிப்படையில் அமைந்த அதி சிறந்த குழு ஒன்றை சபையில் ஏற்படுத்துதல்.

(ஆ) ஏற்றுமதிச் சம்பாதியத்தை அதிகூடியதாக ஆக்குவதும் பொருளாதாரத்துக்கு பங்களிப்பை வழங்குவதற்காகவும் சபையால் கமத்தொழில், கடற்றொழில், கைத்தொழில் துறையில் செயற்பட்டவாறிருக்கும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வர்த்தகக் கண்காட்சிகள் மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களின் பொருட்டு முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் செலவழித்த தொகை முறையே ரூபா 245,617,331 மற்றும் ரூபா 300,282,287 ஆக இருந்த போதிலும், அத்துறைகளின் ஏற்றுமதி வருமான அதிகரிப்பானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் 5.75 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(இ) 2015 ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த கமத்தொழில் மாதிரிகள், கமத்தொழில் வலயம் மற்றும் கமத்தொழில் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன ஏற்றுமதி மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களாக இனங்காணப்பட்டு அதற்கென ரூபா 60,860,000 வருடாந்த நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்ட போதும், அதில் 40 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 13,280,000 மாத்திரமே ஏற்றுமதி அபிவிருத்திச் செலவினமாக செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்களது இலக்கிடப்பட்ட நோக்கை எய்துவதற்கான மதிப்பாய்வு மற்றும் மீளாய்வு என்பவற்றின் பொருட்டுத் தொடர் நடவடிக்கைகளை

மேற்கொள்வதற்கான விதி முறைகளும் நடைமுறைகளும் திட்டமிடப்பட்டு அமுலாக்கப்படாமையால் அவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்கள் வெற்றியளித்திருக்கவில்லை.

(ஈ) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 35,220,000 பெறுமதியான 24 செயற்பாடுகளும் ரூபா 67,220,000 பெறுமதியான 52 செயற்பாடுகளும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. நிகழ்ச்சித்திட்டங்களுடன் சம்பந்தப்படும் நிறுவனங்கள், நபர்கள், அமைப்புகள் என்பவற்றுடன் ஆரம்பக் கலந்துரையாடல் மேற்கொள்ளப்படாமலும் பல்வேறு நாடுகளது சமூக, பொருளாதார, அரசியல் சூழலையும் முன்கூட்டியே மீளாய்வு செய்யாது, 2014 ஆம் ஆண்டில் ரூபா 850,000 பெறுமதியான 5 நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் 2015 ஆம் ஆண்டில் ரூபா 16,350,000 பெறுமதியான 9 நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டதால் அவற்றை அமுல்படுத்த முடியாதுபோனது. எஞ்சிய நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படாமைக்கான காரணங்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(உ) 2013 முதல் 2015 வரை பிரதேச அபிவிருத்திப் பிரிவின் கீழ் அமுலாக்கப்பட்டதும் எதிர்வரும் ஆண்டுகளிலும் அமுலாகிவரும் செயற்திட்டங்கள் தொடர்பாக 2016 ஆம் ஆண்டின்போது நிதியேற்பாடு மேற்கொள்ளப்படாமைக்கும் அவற்றைச் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்காததற்கான காரணமும் வெளிப்படுத்தப்படவில்லை.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட முன்மொழிவொன்றில்லாமல் சபை அங்கீகரித்திருந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்தித் தகவல்களைச் சேகரிக்கும் செயற்திட்டமானது 2014 ஆம் ஆண்டினது செயல் நடவடிக்கைத் திட்டத்திலோ அல்லது பாதீட்டிலோ உள்ளடக்கப்படாததுடன், 2014 மார்ச் முதல் 9 மாதங்களுக்குள் அமுலாக்கப்பட வேண்டிய இச் செயற்திட்டம் 2016 ஜூலை 25 ஆந் திகதியளவிலும் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, இந்நிகழ்ச்சித்திட்டத்தை அமுலாக்குவதற்கு அரச நிறுவனங்களது சேவையில் உள்ள கள உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தபோதும், அந்த

உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பது மற்றும் படிகளை வழங்குதல் சம்பந்தமாகத் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) எக்ஸ்போ மிலானோ கண்காட்சி**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இலங்கை வர்த்தக மற்றும் சுற்றுலா கைத்தொழிலை மேம்படுத்தும் நோக்குடன் 2015 மே 01 முதல் ஒக்டோபர் 31 வரை இத்தாலியின் மிலோனாவில் நடைபெற்ற எக்ஸ்போ மிலானோ 2015 கண்காட்சிக்கு அமைச்சரவையின் அங்கீகாரமின்றி ரூபா 4,440,336 கூடுதலாகச் செலவிடப்பட்டிருந்தது.

(ii) அமைச்சரவையின் அங்கீகாரமின்றி இக்கண்காட்சிக்கு நியமிக்கப்பட்ட எக்ஸ்போ ஆணையாளர் நாயகம் எக்ஸ்போ அதிகாரசபையுடன் இணங்காததால் இலங்கை கண்காட்சிக் கூட நிர்மாண நடவடிக்கைகளுக்கான ரூபா 12,960,000 தொகையுடைய இத்தாலி அரசாங்கத்தின் பங்களிப்பை இலங்கை இழந்திருந்தது. கண்காட்சிக் கூடத்தை நிர்மாணிப்பதற்கு ரூபா 27,944,464 செலவிட வேண்டியதாயிற்று. இதன் காரணமாக, அந்த உத்தியோகத்தர் பதவி நீக்கஞ் செய்யப்பட்டிருந்தபோதும், அரசிற்கு ஏற்பட்ட ரூபா 12,960,000 இழப்பை உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(iii) 2015 ஆகஸ்ட் 06 ஆந் திகதியளவில் இக் கண்காட்சிக்கு சபையால் வழங்கப்பட்ட ரூபா 16,670,000 பங்களிப்பு இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகத்திற்கு ரூபா 10,000,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், கண்காட்சி 2015 ஒக்டோபர் 31 அன்று நிறைவடைந்திருந்த போதிலும், அதற்கான உள்ளவாறான செலவினத்திற்கான இணக்கம் ஏற்படவில்லை. அவ்வாறே, சபை மேலும் கொடுப்பனவு செய்யப்பட வேண்டியிருந்த ரூபா 6,670,000 தொடர்பாக 2015 நிதிச் கூற்றுக்களில் நிதி ஏற்பாடு செய்யப்படாததுடன் மீதியை உறுதிசெய்யும் கடிதம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்படவுமில்லை.

(iv) அமைச்சரவைக் குறிப்பின் பிரகாரம் ரூபா 5,040,000 எக்ஸ்போ இலங்கை தினம் தொடர்பாக ஒதுக்கப்பட்டிருக்கையில் சபையின் தலைவர் மற்றும் மேலதிக பணிப்பாளர் நாயகம் ஆகியார் அத்தினத்தின் பொருட்டு பங்குபற்றுவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறாது நிதி ஏற்பாட்டிலும் கூடுதலாக ரூபா 1,079,688 ஐச் செலவழித்திருந்தனர்.

(v) கண்காட்சியில் பங்குபற்றிய பணிப்பாளர்கள் ஊடகக் கலந்துரையாடலில் பொறுப்பேற்கக் கூடியதாகவிருந்தும், நாட்டைவிட்டுச் செல்வதற்கு சனாதிபதியின் அங்கீகாரத்தைப் பெறாது சுவிற்சலாந்தில் பிரத்தியோக சுற்றுலாவை மேற்கொண்டிருந்ததுடன், இக் கண்காட்சியில் கலந்துரையாடலில் கலந்துகொண்ட தலைவரின் பொருட்டு ரூபா 163,194 செலவிடப்பட்டுமிருந்தது.

(vi) எதுவித திட்டமும் குறிப்பான அடிப்படையுமின்றி கண்காட்சிப் பணிப்பாளர்களாகச் சபையின் உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், இவ்வுத்தியோகத்தர்கள் 2015 மே 15 ஆந் திகதிய MF01/2015/01 இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கையின் 04(ட) பிரிவின் பிரகாரம் திறைசேரியின் அங்கீகாரமின்றி வெளிநாட்டுப் பயணப் படியாக ரூபா 3,770,640 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(vii) கண்காட்சிப் பணிப்பாளராகத் தெரிவு செய்யப்பட்ட உத்தியோக்தர்கள் குறிப்பிட்ட காலத்திற்கும் அதிகமாகப் பணியில் அமர்த்தப்பட்டமைக்கு அங்கீகாரமின்றி ரூபா 120,459 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) முதலீடு

--------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சபையினால் மூன்று கம்பனிகளின் சாதாரணப் பங்குகளில் ரூபா 17,315,000 முதலீடு செய்திருந்தது. மீளாய்வாண்டில் கலைக்கப்பட்டிருந்த போதிலும் அத்தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ii) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் மீண்டும் பதிவு செய்யப்படாததுடன் அடிப்படையில், கம்பனிப்

பதிவேட்டிலிருந்து பெயர் நீக்கஞ் செய்யப்பட்டிருந்த 18 கம்பனிகளது முன்னுரிமைப் பங்குகளது பெறுமதியாகிய ரூபா 5,132,890 பெறுமதியான முதலீட்டை தேறச் செய்வதற்கு சபை ரூபா 93,841,428 மற்றும் 17 கம்பனிகளின் சாதாரண பங்குகளின் முறையான நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை.

(ஈ) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 25 ஆம் பிரிவு, 1994 ஜுன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம், விசேட நிதியத்தை உருவாக்குவதற்காகவுள்ள ஏற்பாடுகளின் கீழ் நிதியத்தை உருவாக்க வேண்டியபோதிலும், அது நிதி அமைச்சரின் சாதாரண கட்டளைகளுக்கு மற்றும் கட்டுப்பாட்டுகளுக்குட்பட்டு அமுலாக்கப்படவும் வேண்டும். எனினும், அங்கீகாரமின்றி சபை கடன் நிதியம் ஒன்றை உருவாக்கியிருந்தது. மேலும், சபையால் அங்கீகரிக்கப்பட்டிராத மேற்படி கடன் நிதியத்தில் ஊழியர்களது ஒருற்கிணைந்த சம்பளத்தில் நூற்றுக்கு ஒரு சதவீதம் மாதாந்தமும் அரசாங்க மானியத்தைப் பயன்படுத்தி மாதாந்தம் 7.2 சதவீத வட்டியும் செலவு வைக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, மீளாய்வாண்டு முடிவில் இக்கடன் திட்டத்திற்கு ஊழியர் பங்களிப்பு ரூபா 5,149,018 ஆகவும் அப்பங்களிப்பிற்கான வட்டி ரூபா 2,567,531 ஆகவும் இருந்தன.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

மீளாய்வாண்டின்போது ரூபா 22,340,000 நிதியேற்பாட்டுடன் 500 நலன்பெறுநர்களுக்குக் கமத்தொழில் உபகரணங்கள் மற்றும் விவசாயக் கிணறுகள் என்பவற்றை வழங்குவதன் மூலம் மன்னார் மாவட்டத்தில் 250 ஏக்கர் காணியில் மிளகாய், பெஷன், அன்னாசி என்பவற்றைப் பயிரிடுவதற்கு ஆரம்பிக்கப்பட்ட ஏற்றுமதி உற்பத்திக் கிராமத்தின் எதிர்பார்த்த பணிகள் 2015 மார்ச் 31 ஆந் திகதியளவில் முடிவடைந்திருக்க வேண்டும். எனினும், நலன்பெறுநர்களுக்கு உபகரணங்களை வழங்குதல், விளைபயிரைச் சேகரிக்கும் நிலையத்தை அமைத்தல் மற்றும் ஏற்றுமதியாளர்களுடன் விற்பனைச் சந்தையை ஒருங்கிணைத்தல் ஆகிய எதுவுமே நடைபெறாது குழாய்வழிக் கிணறுகளை 15 நலன்பெறுநர்களுக்கு வழங்குவதற்கென 2015 மே 26 ஆந் திகதியன்று முற்பணமாக ரூபா 1,050,000 வழங்கப்பட்டிருந்தது.

### 4.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மட்டங்களில் அமுலாக்கப்பட்ட திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் சாரதிகளைப் பயிற்றுவிப்பதற்கு தனியார் சாரதிப் பயிற்சி நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 4,728,200 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. தனியார் சாரதிப் பயிற்சி மூலமாகப் பெறப்படும் ஏற்றுமதித் துறையுடன் தொடர்புடைய பயிற்சி எது என்பதை விளக்குவதற்கும் சபை நடவடிக்கை எடுத்திராததுடன் பயிற்சியை நிறைவு செய்த பயிலுநர்கள் சேவையை வழங்குகையில் ஏற்றுமதி சம்பந்தமாக நடவடிக்கை எடுத்துள்ளனரா போன்ற தொடர் விபரம் அல்லது அதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளலோ சபை கவனஞ்செலுத்தியிருக்கவில்லை. 2016 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் திறன் அபிவிருத்திச் செயற்திட்டத்திற்கான செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிராதமையால் இச் செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை மட்பாண்டம் மற்றும் கண்ணாடிக் கைத்தொழில் சங்கத்தால் 2002, 2004, 2006, 2011 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் சுயாதீனமாக நடாத்திய கருத்தரங்கின் பொருட்டு 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 12(1) ஆம் பிரிவுக்கு முரணாக, 2015 ஆம் ஆண்டின் போது கருத்தரங்கின் பங்காளியாகத் தொடர்பு கொண்ட சபையானது அதன் பொருட்டு செலவிட்டிருந்த தொகை ரூபா 455,000 ஆகும். ஓட்டு உற்பத்திக் கைத்தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூபா 500,000 இக்கருத்தரங்கிற்குப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உடன்படிக்கையோ மதிப்பீட்டு அறிக்கையோ இல்லாது வாகனத் தரிப்பிடத்திற்கான காணியின் பொருட்டு சபையின் இணைந்த கம்பனிக்கு மாதாந்தம் ரூபா 4,000 வீதப்படி 2017 மே 07 முதல் 2016 பெப்ரவரி 29 வரை ரூபா 296,809 கூட்டுத்தொகையானது குத்தகை வாடகையாகக் கொடுப்பனவு

செய்யப்பட்டிருந்த போதும், அவ்விடமானது வாகனத் தரிப்பிடமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முறையான முகாமைத்துவமோ அல்லது சாத்தியக்கூறு ஆய்வொன்று இல்லாது திட்டமிடப்பட்டதன் காரணமாக ரூபா 7,280,000 ஒதுக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட 50 ஏக்கர் காணியில் உள்ள அன்னாசிப் பயிர்ச் செய்கைச் செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. மேலும், வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் 2010 ஆம் ஆண்டின்போது ரூபா 22,720,000 செலவில் ஆரம்பிக்கப்பட்ட மிளகாய்ப் பயிர்ச் செய்கைச் செயற்திட்டத்தின் வெற்றி குறித்துத் தொடர் நடவடிக்கையின்றியும் மன்னார் மாவட்டத்தில் மீண்டும் மிளகாய்ப் பயிர்ச்செய்கைக்கான செயற்திட்டத்தை ஆரம்பித்தமை பயனற்ற செயலாகி இருந்தது.

(இ) 30 கம்பனிகளில் முன்னுரிமைப் பங்குகளில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 105,058,084 முதலீடுகளில் 1997 முதல் 2014 வரையான காலப்பகுதியின்போதும் 35 கம்பனிகளில் சாதாரண பங்குளில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 58,312,484 தொகையான முதலீட்டிற்காக 2001 முதல் 2015 வரையான காலப்பகுதியின்போது பங்கிலாபம் கிடைத்திருக்கவில்லை.

(ஈ) இணையப் பக்கங்களை நிர்மாணிக்கும் அனுபவம் மிக்க 8 உத்தியோகத்தர்களும் கணனி நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிப்பாளரான இருவரும் சேவையில் இருக்கையில் 2014 ஜூன் 30 முதல் 2015 ஜூன் 29 வரையான காலத்தின்போது சபையின் இணையதளத்தை அபிவிருத்தி செய்வதற்கென பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 5,128,200 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 4.6 இனங்காணப்பட்ட இழப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபை மற்றும் அலுவலகப் போக்குவரத்துச் சேவையை வழங்கும் நிறுவனங்களுக்கு இடையே உள்ள உடன்படிக்கைகளில் வாகனத் தரிப்பிட வசதிகளை வழங்குவதற்குச் சபை இணக்கம் தெரிவித்திருக்காமையால் அவ்வாகனங்களின் பொருட்டுக் கொடுப்பனவு செய்த ரூபா 835,009 வாகனத் தரிப்பிட வாடகைக் கட்டணத்தைக் குறித்த பஸ் உரிமையாளர்களிடமிருந்து அறவிட முடியாதிருந்தது.

(ஆ) சபை உத்தியோகத்தர்களது விமானப் பயணச்சீட்டுக்களைக் கொள்வனவு செய்கையில் தாமதக் கட்டணம் மற்றும் இரத்துச் செய்தல் கட்டணமாக 2014 ஆம் ஆண்டில் ரூபா 51,000 மற்றும் 2015 ஜுன் 30 வரை ரூபா 7,000 எனச் சபையால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) பாதுகாப்புச் சேவையை வழங்கும் நிறுவனத்துடன் சபை ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கைப் பிரகாரம் நாளொன்றிற்கான கட்டணம், வரி உட்பட, ரூபா 16,780 ஆகும். எனினும், கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகையில் அவ்வரியுடனான பெறுமதிக்கு மீண்டும் வரி கணிப்பிடப்பட்டுக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டமையால் 2015 சனவரி முதல் ஜுலை வரை ரூபா 325,686 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் அங்கீகரிக்கப்பட்ட சேவை காலத்திற்கு கொடுப்பனவு செய்யப்படாது ரூபா 157,900 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது,

(ஈ) அலுவலகத்தை இரு கூறாக்குவதற்குக் குறைந்த விலையைக் குறிப்பிட்ட நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்படாமையால் ரூபா 49,467 உடன் அகற்றப்பட்ட பொருட்களுக்காகப் பெறவேண்டிய ரூபா 75,000 என ஆரம்பத்திட்டம் மாற்றமடைந்ததால் ரூபா 282,233 உடன் உடன்படிக்கைத் தொகைக்கு அதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 7,286 அத்துடன் தாமதக் கட்டணம் ரூபா 90,149 என மொத்தமாக ரூபா 504,135 சபைக்கு நட்டம் ஏற்பட்டிருந்தது.

(உ) உணவு, குடிபானங்கள் வழங்கல் மற்றும் ஏற்றுமதித்துறையில் ஈடுபட்டுள்ள 25 பேரையும் சேர்த்து ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு 2015 பெப்ரவரி 8 முதல் 12 வரை நடைபெற்ற வர்த்தகக் கண்காட்சிக்கு பணிப்பாளர் சபை அங்கீகாரத்திற்கு முரணாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதால் சபை கூடுதலாகச் செலவழித்த தொகை ரூபா 225,370 ஆகும்.

(ஊ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையுடன் 2013 நவெம்பர் 13 முதல் 17 வரை பொது நலவாய அரச தலைவல்கள் கூட்டத்துடன் இணைந்ததாக நடைபெற்ற வர்த்தகக் கண்காட்சியினது அமைப்பு மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகள் சபையிடம் ஒப்படைக்கப்பட்டிராத போதும், அதற்கென சபை ரூபா 10,934,625 செலவழித்திருந்தது. கண்காட்சியினது அமைப்பும் முகாமைத்துவமும் தொடர்பான நடவடிக்கைகளுக்கு கம்பனி ஒன்றைத் தெரிவு செய்கையில் சமர்ப்பிக்கப்பட வேண்டி கூறுவிலைகளில்

குறைந்த கூறு விலையைக் கருத்திற் கொள்ளாமையால் சபைக்கு ரூபா 8,184,555 நட்டம் ஏற்பட்டிருந்தது.

4.7 பதவியணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கேற்ப குறித்த தகைமைகளைக் கொண்டிராத பணிப்பாளர் நாயகமும் பிரசார உத்தியோகத்தர் பதவிக்கான இரு உத்தியோகத்தர்களும் முகாமைத்துவ உதவிப் பதவிகளுக்கு மூன்று பேரும் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஆ) 2014 நவெம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கைக்கு முரணாக 180 நாட்கள் தொடர்ச்சியாகப் பணியாற்றாத 8 ஊழியர்கள் பயிற்சிக்கு ஆட்சேர்க்கப்பட்டு 6 பேர் நிரந்தரமாக்கப்பட்டிருந்தன.

(இ) ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்களை நிரந்தரமாக்கும் போது அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கேற்பக் கல்வித் தகைமைகள் நிறைவு செய்யப்படாத 9 ஊழியர்கள் நிரந்தரமாக்கப்பட்டிருந்தனர்.

4.8 ஏனைய அரச நிறுவனங்களுக்க வழங்கப்பட்ட சபையின் வளங்கள்

2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க நல்லாளுகை தொடர்பான பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 பிரிவிற்கு முரணாக சபையின் 5 வாகனங்களும் 4 உத்தியோகத்தர்களும் சனாதிபதி அலுவலகம், விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் பிரத்தியோக செயலாளர், அமைச்சரது ஊடகப் பிரிவு மற்றும் வரிசை அமைச்சிற்குப் பணியில் அமர்த்தப்பட்டு மீளாய்வாண்டின்போது வாகனப் பராமரிப்புச் செலவினமாகவும் பதவியணியினரது சம்பளம் மற்றும் படிகளாகவும் ரூபா 1,311,777 சபையால் செலவழிக்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2013 ஜூன் 03 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் குறித்த நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்க வேண்டுமாயினும், 2015 நிதியாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் 2016 ஏப்ரல் 29 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

திட்டத்தில் உள்ளடங்கிய ஒவ்வொரு செயற்பாடும் ஆரம்பிக்கப்பட வேண்டிய திகதி, முடிவடைய வேண்டிய இலக்கிடப்பட்ட திகதி மற்றும் இலக்கிடப்பட்ட பௌதிக அளவு குறிப்பாக இனங்காணப்படவில்லை.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் தலைமை உள்ளகக் கணக்காய்வாளர் பதவி இரண்டு ஆண்டுகளாக வெற்றிடமாக இருந்தது. போதிய பதவியணியினர் இன்மையால் மீளாய்வாண்டின்போது 2 கணக்காய்வு ஐய வினாக்கள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவைப் பலப்படுத்துவதில் சபை கவனஞ் செலுத்தியிருக்கவில்லை.

### 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டினது பாதீட்டுச் செலவினம், உள்ளவாறான செலவினம் என்பவற்றுடன் ஒப்பிடுகையில் பாதீடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டிலும் கூடுதலாக ரூபா 112,830,000 செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே, அபிவிருத்திப் பணிகள், பிரதேச அபிவிருத்திப் பணிகள், நிலையான சொத்துக்கள் கொள்வனவு மற்றும் வருமானச் செலவினத்திற்கான பாதீட்டு நிதியேற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினம் என்பவற்றுக்கிடையே 32 முதல் 387 சதவீதம் வரையிலான வேறுபாடு அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்மான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 5.5 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும், போதியளவு கவனம் செலுத்தப்படாதிருக்கும் கணக்காய்வுப் பந்திகள் பின்வருமாறு,

### 2014 ஆம் ஆண்டு

(அ) தெஹிவளை கல்கிஸ்ஸ மாநாகரசபைக்கு சொந்தமான கட்டிடம் ஒன்றில் சபையின் ஒரு களஞ்சியம் உள்ள இடத்தின் ஒரு பகுதி உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அதற்கான உப ஒப்பந்த உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் 12(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் அதிகாரங்களுக்கும் கடமைகளுக்கும் முரணாக 2014 ஆம் ஆண்டில் ரூபா 4,020,848 செலவிடப்பட்டிருந்தது.

(இ) 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 12(உ) பிரிவின் படி சபை 1988 முதல் பிரத்தியோக கம்பனிகளில் முதலீடு செய்திருந்த ரூபா 929,548,150 தொடர்பாக நீதி அமைச்சரின் அங்கீகாரம் பெறப்படவில்லை.

(ஈ) சபையின் பாதுகாப்புச் சேவையில் பணியாற்றியதாகப் போலியாகக் கையெழுத்திட்டுப் பெறப்பட்ட ரூபா 226,530 சம்பளமானது மீள அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவிற்கு முரணாக சபைக்குச் சொந்தமான 5 வாகனங்களும் 4 உத்தியோகத்தர்களும் வரிசை அமைச்சில் சேவையில் ஈடுபடுத்தி 2014 ஆம் ஆண்டில் வாகனப் பராமரிப்புச் செலவினம், பதவியணியினர் சம்பளம் மற்றும் படி என ரூபா 2,824,256 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

2013 ஆம் ஆண்டு

---------------------------------

(ஊ) குத்தகைக் காலத்தை நீடிக்காதும் புதிய உடன்படிக்கையில் கைச்சாத்திடாமலும் 2013 ஆகஸ்ட் 01 முதல் 2013 திசெம்பர் 31 வரை குத்தகை வாடகையாக ரூபா 841,000 செலுத்தப்பட்டிருந்தது.

(எ) ஜாதிக சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொழும்பு மாவட்ட அலுவலகத்திற்கு வழங்க வேண்டியதாகக் குறிப்பிடப்பட்ட ரூபா 1,009,740 அவ்வலுவலகத்தால் உறுதி செய்யப்படாதும் முறையான அங்கீகாரம் இல்லாதும் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஏ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை XXIV அத்தியாயத்தின் 3.5 பிரிவுக்கு முரணாக மோட்டார் சைக்கிள் கடன் மற்றும் இடர் நிவாரணக் கடன் வழங்கப்படுகையில் மாதாந்தக் கழிவுகளது மொத்த எல்லை மாதாந்தச் சம்பளத்தின் 50 சதவீதம் எனக் கருதப்பட்டு வழங்கப்பட்டிருந்தது.

(ஐ) இந்தியாவில், சென்னையில் 2004 முதல் 2009 வரையான காலப்பகுதியின் போது சபை நடாத்திய இலங்கை வர்த்தக நிலையத்தின் 5 விற்பனைக் கூடங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய வாடகை நிலுவையும் மின் கட்டணமும் ஆகிய ரூபா 7,049,858 ஐ 2016 ஆகஸ்ட் 15 ஆந் திகதியளவிலும் அறவிடப்படவில்லை.

2012 ஆம் ஆண்டு

------------------------------------

(ஒ) "ஹம்பாந்தோட்டை பட அத" கைத்தொழில் நிகழ்ச்சித்திட்டத்தின் தோற்பொருள் செயற்திட்டத்திற்கு ரூபா 1,000,000 முதலீடு செய்து நிறுவப்பட்ட தனியார் கம்பனியின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவது கைவிடப்பட்டமையால், முதலீடு செய்யப்பட்ட தொகையைச் சபைக்கு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாடுகளும் | அவதானிப்பு |
| --- | --- |
| (அ) முதலீடு | முறையான அங்கீகாரம் பெறப்படாமையும் தொடர் நடவடிக்கை எடுக்காமையும் |
| (ஆ) கடன் கட்டுப்பாடு | ஏற்றுமதிக் கம்பனியுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்படாமை கடன் மற்றும் வட்டி அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்காமையும் |
| (இ) விசேட செயற்திட்டக் கட்டுப்பாடு | சபையின் நோக்கங்களுக்கு முரணாக செயற்திட்டங்களை ஆரம்பிக்காமையும் இலக்கிடப்பட்ட நோக்கு நிறைவேறாது கைவிடுதலும் செயலாற்றல் அறிக்கை நாளது வரையாக்கப்படாமையும் |
| (ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீடு செய்யப்பட்ட வருமானம், செலவினம் தொடர்பான கூற்று மற்றும் நிதி நிலைமைக்கூற்று ஆகியவற்றைத் தயாரிக்காமையும் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படாமையும். |

ஒப்பம்: எச்.எம். காமினி விஜேசிங்க
கணக்காய்வாளர் தலைமை அதிபதி